# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 26 செவ்வாய்க்கிழமை (10.01.2006)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 44


## நித்திரைப் படுக்கையில் தமிழர்களைக் கைதுசெய்வதை கிரிமினல்களைப் பிடிக்கும் செயற்பாடு என விளக்கம்

### இணைத் தலைமைகளின் காதில் பூச்சுற்றி அரசுத் தரப்பில் கருத்து

கொழும்பு, ஜன.10

கொழும்பில் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்களை நித்திரைப் படுக்கையில் கைதுசெய்து பொலீஸ் நிலையங்களுக்குக் கூட்டிச் சென்று தடுத்து வைத்த 'ஸ்ரேஞ்ஞர்ஸ் நைற்' நடவடிக்கை குறித்து உதவும் நாடுகளின் இணைத் தலைமைக்கு காதில் பூச்சுற்றுவது போல அரசுத் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டிருக்கின்றது.

இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியபோதே இவ்வாறு விளக்கமளிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்விடயம் ஜனாதிபதி செயலகச் செய்திக் குறிப்பிலேயே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதுதான் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதில் இவ்விடயம் குறித்து கூறப்பட்டிருப்பதாவது:-

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 'ஸ்ரேஞ்ஞர்ஸ்நைற்' நடவடிக்கை குறித்து இணைத் தலைமைகளினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டது.

போதைவஸ்துப் பாவனையாளர்கள், கும்பல்களைச் சேர்ந்தோர்

(14ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்குப் புலிகளைக் கூட்டிவர விரைந்து நடவடிக்கை எடுங்கள்!



இணைத் தலைமை நாடுகளின் கொழும்பு தூதுவர்களை ஜனாதிபதி நேற்று சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

## இணைத் தலைமைநாடுகளிடம் ஜனாதிபதி மஹிந்த மன்றாட்டம்

கொழும்பு, ஜனவரி 10

அமைதிப் பேச்சு மேசைக்கு விடுதலைப் புலிகளைக் கொண்டுவருவதற்கான உடனடி நடவடிக்கையை இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அவற்றிடம் மன்றாட்டமாகக் கோரிக்கை விடுத்திருக்கிறார். தற்போதைய மோசமான நிலை தொடருமானால், தாம் தொடர்ந்தும் பொறுமை காக்கும்போது அதை சகிக்க முடியாது அரசபடைகள் தமக்கெதிராகப் பொங்கியெழுந்தால்கூட அதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லையென்றும் ஜனாதிபதி ராஜபக்ஷ, இணைத் தலைமை நாடுகளின் இலங்கைக்கான பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிறார் எனத் தெரியவருகின்றது. (14ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப் பேச்சு குறித்து முடிவு செய்ய 19ஆம் திகதி அனைத்துக் கட்சி மாநாடு

### கட்சித் தலைவர்களுடன் ஜனாதிபதி நடத்திய சந்திப்பில் முடிவு

கொழும்பு, ஜன.10

விடுதலைப் புலிகளுடனான அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பில் எதிர்வரும் 19ஆம் திகதி மத மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகளைக் கொண்ட பல தரப்பு மாநாடு ஒன்றைக் கொழும்பில் நடத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியற் கட்சிகளின் தலைவர்களை நேற்று அலரிமாளிகையில் ஜனாதிபதி சந்தித்தார்.

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டியூ குண சேகர, ரோஹித்த போகொல்லாகம, தினேஷ் குணவர்தன, பேரியல் அஷ்ரப், டக்ளஸ் தேவானந்தா, ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊடகவியலாளர் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.10

தமிழ் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவித்தும், தமிழ் ஊடகவியலாளர்களுக்கெதிரான நடவடிக்கைகளைக் கண்டித்தும் கொழும்பில் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்புக்கு அழைப்பு இல்லை

கொழும்பு, ஜன.10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் கலந்துகொள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும்அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இந்தக்கூட்டத்தில் பங்குபற்றியதாக ஜனாதிபதி செயலகம் நேற்று மாலை விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, இந்தக்கூட்டத்தில் கலந்துகொள்ள எந்த அழைப்பும் ஜனாதிபதி அலுவலகத்திலிருந்து தமக்கு விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். (க)

## வவுனியாவில் இரு சடலங்கள் சூட்டுக் காயங்களுடன் மீட்பு

வவுனியா,ஜன.10

வவுனியா பனிச்சங்குளம், ஸ்கந்தபுரம் மயானத்திற்கு அருகிலிருந்து இரண்டு சடலங்களை வவுனியாப் பொலீஸார் நேற்றுக் காலை மீட்டிருக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இந்தச் சடலங்கள், பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த இருவருடையவையாக இருக்கக்கூடுமென்று பொலீஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் மீட்கப்பட்ட இடத்திற்கு சென்ற வவுனியா நீதிவான், விசாரணைகளை முன்னெடுத்து, கொல்லப்பட்டவர்கள் யாரென்று அடையாளம் காணுமாறு வவுனியாப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

கொல்லப்பட்டவர்கள் சிவில் உடையில் இருந்ததாலும், அவர்களிடம் எவ்வித ஆவ

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் இளைஞர் கொலை!

யாழ்ப்பாணம், ஜன. 10

திருநெல்வேலி, இராஜ வீதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று மதியம் இரண்டு மணியளவில் திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, அரசடி அம்மன்கோவில் அருகிலுள்ள வீடியோ நிலையத்தின் நுழைவாயிலில் இடம்பெற்றுள்ளது. கொலையுண்டவர் பஞ்சரத்தினம் பிரணவன் (வயது 24) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மார்புப் பகுதியில் சுடப்பட்ட இந்த இளைஞர் அந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்!

தென்மராட்சி, ஜன.10

கொடிகாமம் சந்தைப் பகுதியில் நேற்று இனம் தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந் தார். நேற்று நண்பகல் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மிருசுவிலைச் சேர்ந்தவரான ஐயாத்துரை சுஜீவன் (வயது 24) என்பவரே வயிற்றில் படுகாயமடைந்தார்.

கொடிகாமம் நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் இவர் பணியாற்றிக் கொண்டிருந்தார் என்றும் - (14ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுததாரிகளால் குடும்பஸ்தர் கடத்தல்

வலி.வடக்கு,ஜன.10

இளவாலைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டார் என்று அவரது மனைவி பொலீஸாரிடம் முறையிட்டுள்ளார்.

வட்டபுலத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கமில்டன் மரியசீலன் (வயது 29) என்பவரே கடத்தப்பட்டவராவார். நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் வாகனத்தில் வந்த சிலர் வீட்டைச் சோதனையிடப் (14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கதிர்காமரின் கொலையைக் கண்டித்த சர்வதேசம் ஜோசப் எம்.பி. கொலைக்கு மௌனம் சாதிக்கிறது!

## விசுவமடுப்பிரதேச வெகுஜன அமைப்புகள் விசனம்

பரந்தன்,ஜன.10

சிங்கள அரசின் இனப்படுகொலை முயற்சிகளையும் இராணுவ அட்டூழியங்களையும் சர்வதேச சமூகம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கிறது. லஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டபோது கண்டனம் தெரிவித்த நாடுகள் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. கொல்லப்பட்டபோது அதனைப்பற்றி வாய்திறக்காமல் மௌனம் சாதிக்கின்றன.

இவ்வாறு தெரிவித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு மகஜர் ஒன்றைக் கையளித்திருக்கிறது விசுவமடுப் பிரதேச வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம்.

ஸ்ரீலங்கா அரசினதும் படைகளினதும் அட்டூழியங்களைக் கண்டித்து நேற்றுக்காலை விசுவமடுவில் இடம்பெற்ற பேரணியின் முடிவில் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கான மகஜர் கிளிநொச்சிமாவட்ட கண்காணிப்புக் குழு அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புலிகளுடன் போரிடும் திராணியற்ற சிங்களப் படைகள் தமிழ்மக்களைக் கோழைத்தனமான முறையிலும் கோரமான வழிகளிலும் படுகொலை செய்துவருகின்றன.

தமிழ்த் தேச பற்றாளர்களை தமிழ் புத்திஜீவிகளை தேடியழித்த சிங்களப் படைகள் இப்போது ஒட்டுமொத்த தமிழினத்தையே குறிவைத்து பொதுமக்களைக் கண்டபடி கொன்றொழித்து வருகின்றன.

மட்டக்களப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் அநாகரிகமான வகையில் ஆலயத்துள்ளே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் ஈவுஇரக்கமற்ற முறையில் சிங்களப் படையினால் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களை சிங்களப் படைகள் கொன்று குவித்து அட்டூழியங்கள் புரிந்துவருவது இப்போது வழமை போலவே மாறிவிட்டது.

மக்களைப் படுகொலை செய்துவிட்டு புலிகளைக் கொன்றதாக சிங்கள அரசு பச்சைப் பொய் கூறி திமிர்த்தனமாக அறிக்கைகளையும் விட்டுவருகின்றது.

தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல கொழும்பு, மலையகம் போன்ற தமிழர் வாழ்விடங்களிலும் இந்த இம்சைகள் தொடர்கின்றன.

சிங்கள அரசின் இந்த இனப்படுகொலை முயற்சிகளையும் இராணுவ அட்டூழியங்களையும் சர்வதேச சமூகம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கின்றது.

மன்னாரில் ஐந்து சிங்களப் படைகள் கடற்சண்டையில் கொல்லப்பட்டபோது அதைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கண்டனம் செய்து அறிக்கை வெளியிட்டிருந்தது.

ஆனால், எமது சகோதரி தர்சினி பயங்கரமான முறையில் படுகொலை செய்யப்பட்டபோது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு மௌனம் காத்தது.

கொழும்பில் கதிர்காமர் கொல்லப்பட்டபோது கண்டனம் தெரிவித்த சர்வதேச நாடுகள், நிறுவனங்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலைசெய்யப்பட்டபோது வாய்மூடி சும்மா இருக்கின்றன.

சர்வதேச நாடுகளின் இந்த இரட்டைப் போக்கு தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியையும் விரக்தியையும் உண்டுபண்ணியுள்ளது.

சிங்களப் படைகளின் இனக்கொலையையும், இராணுவ அட்டூழியங்களையும் சர்வதேச நாடுகள் கண்டித்து, படுகொலைகளை நிறுத்த சிங்கள அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று நாம் சர்வதேச சமூகத்தைக் கோருகின்றோம்.

இல்லாவிட்டால் தமிழ்ப் பெண்கள் பொங்கியெழுந்து ஆயுதங்களாலே பதில் சொல்வார்கள்.

இந்த நிலையைக் கருத்திற்கொண்டு ஸ்ரீலங்கா அரசும் சர்வதேச சமூகமும் எமக்கான சரியான தீர்வொன்றை விரைவாகத் தர வேண்டுமென்று விசுவமடு பிரதேச வெகுஜன அமைப்புக்களான நாங்கள் இம்மனுவைக் கையளிக்கின்றோம். (த-13-352)

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரியை 16ஆம் திகதி ஆரம்பிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியை எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பிக்குமாறு கோரும் சுற்றறிக்கை தொழிற்கல்வித் திணைக்களத்தினால் அனுப்பிவைக் கப்பட்டுள்ளது என்று யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார்.

குடாநாட்டில் காணப்படும் அசாதாரண நிலமை தொடர்பாகத் தாம் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொண்டு பேசியதாகவும் -

கல்விச் செயற்பாடுகளை நாட்டின் நிலைமையைப் பொறுத்தே ஆரம்பிக்க வேண்டி இருப்பதுடன் மாணவர்களின் அனுமதியை மட்டும் தற்போது வழங்குவதற்குத் தாம் ஏற்பாடு செய்துள்ளதாகவும் -

தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் இந்த ஆண்டுக்கான புதிய கற்கை நெறிகளுக்குப் பெரும் எண்ணிக்கையான மாணவர்களின் விண்ணப்பங்கள் வந்துசேர்ந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை அனைத்துப் பயிற்சி நெறிகளுக்கும் எழுத்துப் பரீட்சை மூலமே மாணவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்று தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

இந்த எழுத்துப்பரீட்சை தொழில்துறை சார்ந்த பொதுஅறிவு, நுண்ணறிவு விடயங்களை உள்ளடக்கியதாக அமையவுள்ளது. இப்பரீட்சைக்கு ஒவ்வொரு துறையிலும் 200 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான பரீட்சை அனுமதிக் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (ஐ-12)

# மீன்பிடித் தடையால் குடாநாட்டில் ஆயிரத்து 572 குடும்பங்கள் தவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.10

குடாநாட்டில் கடற் படையினர் விதித்துள்ள மீன்பிடித்தடை காரணமாக வடமராட்சி வடக்கு, வலி.தென்மேற்குப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்து 572 மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழிலாளர் சங்க வட்டாரங்கள் தெரிவித் தன.

கடந்த டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் குடாநாட்டுக் கடற் பரப்பில் மீன்பிடிப்பதற்குக் கடற்படையினர் விதித்துள்ள மீன்பிடித் தடையினால் வடமராட்சி வடக்கில் கெருடாவில், தொண்டைமானாறு, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 990 மீனவக் குடும்பங்களும், வலிகாமம் தென்.மேற்கில் மாதகல், சீந்திப்பந்தல், ஊறணி, சேந்தாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 582 மீனவர் குடும்பங்களும், தொழில் வாய்ப்பின்றிக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்கள் தமது நாளாந்த ஜீவனோபாயத்துக்கு வருமானம் இன்றித் தவிக்கின்றன. இவர்களது பிரச்சினைக்கு அரசு இதுவரை எந்த விதமான ஆக்க பூர்வமான நடவடிக்கையும் எடுக்காதது குறித்து கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-8)

## ஈழத்துச் சிதம்பரத்துக்கு புதிய சித்திரத் தேர்

யாழ்ப்பாணம்,ஜன.10

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்துக்குப் புதிய சித்திரத்தேர் இன்று கையளிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தமது 40ஆவது பிறந்த நாளை ஒட்டி காரைநகர் மக்களுடன் இணைந்து இந்தப் புதிய தேரை வடிவமைத்து வழங்கியுள்ளார்.

இன்று காலை தேர் வெள்ளோட்ட விழாவும் அங்கு இடம்பெறவுள்ளது.

(வெள்ளோட்ட விழா பற்றிய சிறப்பு மலர் உள்ளே) (ஐ)

## பெருமாள் கோயிலில் இன்று சுவர்க்கவாயில் ஏகாதசி

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிமுதல் நாளை அதிகாலை 3மணி வரை நடைபெறவுள்ளது.

விசேட பூசைகளைத் தொடர்ந்து வைகுண்ட ஏகாதசி எனும் பொருளில் தமிழருவி த.சிவகுமாரனின் தெய்வீகப் பேருரையும், பஜனை மற்றும் "சூடிக் கொடுத்த சுடர்க் கொடி" எனும் தலைப்பில் இராசையா ஸ்ரீதரன் குழுவினரின் வில்லிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (த-13)

# படையினருக்கு ஆதரவு வழங்க இயக்கம் ஆரம்பிக்கிறது ஜே.வி.பி

கொழும்பு.ஜன.10

படையினருக்கு ஆதரவு வழங்கும் இயக்கம் ஒன்றை ஜே.வி.பி. ஆரம்பிக்கவுள்ளது. இந்தப் பிரசார இயக்கத்தை முன்னெடுக்கக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கூறியுள்ளார்.

விமல் வீரவன்ஸ, ரில்வின் சில்வா, கே.டி. லால்கந்த, அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் இக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

நாட்டில் யுத்தம் ஒன்று வருமாயின் அதற்கான முழுப் பொறுப்பையும் ஜே.வி.பி. தான் ஏற்க வேண்டும் என்று ஐ.தே.கட்சி கூறிவருகிறது. இந்தப் பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் படையினருக்கு ஆதரவளிக்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறோம் என்று அமரசிங்க தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் மேற்கொள்ளும் தாக்குதல்கள் தொடர்பாக கொழும்பு ஊடகங்கள் பெரிய அளவில் பிரசாரம் செய்யக் கூடாது என்று ஜே.வி.பி. ஊடகங்களைக் கோரவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பி. ஆரம்பிக்கும் இயக்கத்துக்கு சுதந்திரக் கட்சியும் ஆதரவு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் ஜே.வி.பி. கேட்டுள்ளது. ஆனால், உடனடியாக அதற்குப் பதில் தரமுடியாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். சுதந்திரக் கட்சியின் ஆதரவு இன்றி இந்த இயக்கத்தை முன்னெடுக்க ஜே.வி.பி.தயாராகவுள்ளது. (ஒ-3)

## 'டோறா' படகுத் தகர்ப்புத் தாக்குதலில்

# தப்பிப் பிழைத்த இரு சிப்பாய்களும் கண்காணிப்புக் குழுவுக்கு வாக்குமூலம்


திருகோணமலை,ஜன.10

திருகோணமலையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை 'டோறா' படகு மூழ்கடிக்கப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் தப்பிப்பிழைத்து திருகோணமலை தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் கடற்படைச் சிப்பாய்கள் இருவரிடமிருந்தும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வாக்குமூலங்களைப் பெற்றுள்ளது.


கடந்த சனிக்கிழமை திருமலை துறைமுகக் கடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றின்போது கடற்படைக்குச் சொந்தமான டோறாப் படகொன்று சேதமாக்கப்பட்டது. அந்தப் படகிலிருந்த 13 பேருக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியவில்லை. இந்த சம்பவத்தின்போது கடலில் குதித்துத் தப்பிய இரு கடற்படைச் சிப்பாய்கள் தற்போதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சிப்பாய்கள் இருவரை நேற்று சந்தித்த இலங்கைப் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் திருகோணமலைக் கிளையின் அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் அவர்களிடம் நீண்ட விசாரணைகளை நடத்தியிருக்கின்றனர்.

திருகோணமலைத் துறைமுகக் கடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு. அரசாங்கத்திற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)



வவுனியாவில் நேற்று இரு சடலங்கள் மீட்கப்பட்ட ஸ்கந்தபுரம் மயானத்திற்கு வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் பொலீஸ் அதிகாரிகளுடன் சென்று விசாரணை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.



கொடிகாமத்தில் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஐயாத்துரை சுஜீவன். [படம்:பிரியன்]



நேற்று.திருநெல்வேலியில் சுட்டுக் கொல்லப்பட்ட பஞ்சரட்ணம் பிரணவனின் சடலம். (படம்:பிரபா)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தமிழர் தாயக மூலவளத்தை சூறையாடும் கபடத் திட்டம்

தமிழர் தாயகத்தின் இதயமாகவும் கேந்திர நிலையமாகவும், பெருமளவு இயற்கைக் கனியவளங்கள் புதைந்து கிடக்கும் பொக்கிஷ பூமியாகவும் கருதப்படும் மன்னார் வளைகுடாவில் உள்ள பெற்றோலிய வளங்களை அகழ்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசு முனைப்புடன் மேற்கொள்ளத் தொடங்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

தமிழர் தாயகத்தின் கரையோரப் பிரதேசத்தில் புதைந்து கிடக்கும் மூலவளங்களை -

தமிழர் தாயகத்தின் அரசியல் நிலைமை தொடர்பான சர்ச்சை இனப்பிரச்சினையாகவும் பெரும் கொடூரப் போராகவும் வெடித்து, ஒரு சிக்கலாகத் தொங்கிக்கொண்டிருக்கும் நிலையில் -

அத்தாயகப் பிரதேச மூலவளத்தை சூறையாடும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு தென்னிலங்கை அரசு தன்னிச்சையாக - ஒரு தலைப்பட்டசமாக - முயற்சி எடுக்கிறது. இது ஒரு வகையில் மற்றைய இனத்தின் தாயகத்தைக் கொள்ளையிடும் செயலாகவே கொள்ளப்பட வேண்டும்.

போர்க் குழப்பங்களுக்கு மத்தியில் இவ்வாறு தமிழர் தாயகத்தின் மூலவளத்தைச் சுரண்ட முனைவது மிக மோசமான - அபத்தமான - அத்துமீறல் - செயலாகும்.

தமிழர்களின் இதய பூமியான யாழ். குடாநாட்டின் வட முனையில் காங்கேசன்துறையில் காலங்காலமாக சிமெந்துத் தயாரிப்பு என்ற பெயரில் சுண்ணாம்புக்கல் வெட்டி எடுத்ததில் குடாநாட்டின் நிலத்தடி நீர் உவரானதைத் தவிரக் குடாநாட்டுக்குப் பலன்ஏதும் கிட்டவில்லை. சில நூற்றுக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால், அங்கிருந்து சுரண்டி எடுக்கப்பட்ட மூலவளத்தால் நாட்டுக்குக் கிடைத்த நன்மையில் ஒரு சிறு பகுதியாவது குடாநாட்டின் அபிவிருத்திக்குக் கிட்டவில்லை என்பதுதான் உண்மை.

அதேபோன்றுதான் தமிழர் தாயகத்தின் மற்றொரு வளம் கொழிக்கும் பிரதேசமான புல்மோட்டையில் இல்மனைட் தொழிற்சாலை மூலம் கனியவளம் சுரண்டப்பட்டது.

இந்த இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களினதும் சிங்களவர்களினதும் தனித்தனியான இரு தாயகங்கள் உள்ளன. அந்த உண்மையை ஏற்று அங்கீகரிப்பதற்குப் பெரும்பான்மையிரான சிங்களவர்களின் அரசியல் தலைமைகள் மறுத்து வருவதே இன்று இந்த இனச்சிக்கலுக்கு அடிப்படையாகும்.

இவ்வாறு இரு வெவ்வேறு இனங்களின் தனித்துவத் தாயகங்கள் பற்றிய விவகாரம் சர்ச்சையில் இருக்கையில் ஓரினத்தின் தாயகப் பூமிக்குரிய மூலவளங்களை - செல்வங்களை - மற்றைய இனம் அபகரிக்க முயல்வது பெரும் சுரண்டலும், சூறையாடலும், கொள்ளையுமாகும் எனக் கூறுவதில் என்ன தப்பு?

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் இக்கட்டில் - நெருக்கடியில் - சிக்கிப் போய் இருக்கையில் இவ்வாறு தமிழர் தாயகப் பூமியிலும் அதைச் சூழவுள்ள கடல் பிரதேசத்திலும் உள்ள வளத்தைச் சூறையாடுவதற்கு காதும் காதும் வைத்தாற்போல எடுக்கப்படும் எத்தனங்கள் சமாதான நடவடிக்கைகளை மேலும் குழப்பி, நெருக்கடியைத் தீவிரப்படுத்தி, மிகவும் மோசமான நிலையை ஏற்படுத்தவே வழி செய்யும். இதனை இத்தகைய இரகசியத் திட்டங்களைப் பகிரங்கப்படுத்தாமல் நாசூக்காக முன்னெடுக்கும் அரசுத் தலைமை உணர்ந்து கொள்வது நல்லது.

இத்தகைய அகழ்வு வேலைகளுக்கு சில வெளிநாடுகளும் உதவி, முண்டு கொடுப்பதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. சூறையாடப்படும் தமிழர் தாயக வளத்தில் தாமும் உரிய பங்கைப் பெற்றுக் கொள்ளும் இலக்கில், இலங்கைக்கு உதவுகின்றோம் என்ற பெயரில், இத்தகைய ஒத்துழைப்பை நல்குவதற்கு அந்த நாடுகள் முன்வரக்கூடும்.

ஆனால், இலங்கைத் தீவில் பேரினவாதத்தால் அடக்கப்படும் ஓரினத்தின் தாயகப் பூமியைக் கொள்ளையிடுவதற்கே தாம் துணை போகின்றோம் என்ற உண்மையை இந்த நாடுகள் உணர்ந்து கொள்ளுமாயின் அவை இந்தச் செயலுக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டா என்பது நிச்சயம்.

தமிழர் தாயகத்தின் எல்லைப் புறத்தில், தமிழர் தரப்பின் பிரதிநிதிகளின் இணக்கம் பெறாமல், இத்தகைய 'சூறையாடல்' நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பது - இணங்கிப் போவது - உதவி செய்வது - போன்றவை தேவையற்ற குழப்பங்களையும் விபரீதங்களையும் ஏற்படுத்தும் என்பதும் ஊகிக்கக் கூடியதே.

மன்னார் வளைகுடா எண்ணெய் அகழ்வுக்கு உதவ முனையும் அந்நிய நாடுகள், சக்திகள் இதையும் கவனத்தில் கொள்வது நல்லது.

இலங்கை இனச்சிக்கலுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிட்டும் வரை இந்த விவகாரத்தில் பங்களிப்பதை அந்நிய நாடுகளும் சக்திகளும் தவிர்த்துக் கொள்வதே நல்லது. இல்லையேல் சிறுபான்மையினரைச் சுரண்டும் பேரினவாதிகளுக்கு துணை போவதாகவே அவற்றின் நடவடிக்கைகள் அர்த்தம் செய்யப்படும் என்பது உறுதி..

# படையினரின் அட்டூழியங்களை நிறுத்தக் கோரி விசுவமடுவில் நேற்றுக் கண்டனப் பேரணி

பரந்தன்,ஜன.10

தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் கொலை முயற்சிகள் , பாலியல் வல்லுறவுகள், அட்டூழியங்கள் என்பனவற்றைக் கண்டித்து விசுவமடுவில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது.


வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணியில் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள், நிறுவனப் பிரதிநிதிகள் உட்படப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

விசுவமடு முதலாம் கட்டைச் சந்திப் பகுதியில் இருந்தும் சுண்டிக்குளம் சந்தியில் இருந்தும் இரு பிரிவாக ஆரம்பித்த பேரணி விசுவமடு மைதானத்தைச் சென்றடைந்தது.

அங்கு கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனத் தலைவி திருமதி தேவாம்பிகை காசிநாதன் தலைமையில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

விசுவமடு ஊரக மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் செ.புஸ்பராசா கண்டன உரையை நிகழ்தினார். அரசுக்கு அனுப்பிவைக்கவுள்ள மகஜரை கண்டாவளை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ. பத்மநாதன் பெற்றுக்கொண்டு பதிலுரை நிகழ்த்தினார்.

(எ-352-204)



நேற்று நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்டவர்களையும் பேரணியின் முடிவில் மகஜர் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : மு.கந்தசாமி, பரந்தன் செய்தியாளர்)

# பல்கலை. அனுமதியில் யாழ். மாணவருக்கும் நியாயமான அதிகரிப்புச் செய்யவேண்டும்

## 'இசற்' புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர் தரப்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.10

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கையில் இம்முறை அதிகரிப்பு இருப்பதனால் யாழ்.மாவட்டக் கோட்டாவிலும் நியாயமான அதிகரிப்பு இடம்பெற வேண்டும். ஒவ்வொரு துறைக்குமான தெரிவு அடிப்படை பற்றிய விவரங்கள் தெளிவுபடுத்தப்படவேண்டும்.

- 'இசற்' வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட மாணவர்கள் (2005-2006) விடுத்திருக்கும் பத்திரிகை அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

தரப்படுத்தலாக அத்திபாரமிடப்பட்டு இன்று தமிழ் மாணவர்களைத் திட்டமிட்ட முறையில் இனவாதியின் பொறியினுள் குரல் வளையை நசுக்கியுள்ள Z வெட்டுப்புள்ளி முடிவுகள் கடந்த வருடம் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் (U:G.C.) வெளியிடப்பட்டமை யாவரும் அறிந்த விடயம். கடந்த வருடங்களிலும் இத்தகைய பாரபட்சங்கள் வெளிப்பட்ட நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகங்களின் அயராத ஒத்துழைப்பால் ஒரு சில கண்துடைப்புகளைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு (U.G.C.) உள்ளாக்கப்பட்டு கிடைத்த மாற்றங்கள் மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

இவ்வருடமும் தமிழ் மாணவர்கள் மீது தனது பாரபட்சத்தை வெளிப்படுத்த (U.G.C,) மறக்கவில்லை என்பதை யாழ். மாவட்ட உயிரியல் பிரிவு, கணிதப் பிரிவு மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிகள் கேள்விக் குறியாகிய விடயம் வெளிக்கொணர்கிறது. உயிரியல் துறையில் 15 இற்கும் அதிகமான மாணவர்கள் மருத்துவத்துறை, பல்லறுவை, மிருகவைத்தியம் மற்றும் மூலக் கூற்று உயிரியல் போன்ற துறைகள் கிடைக்காத நிலையிலும் கணிதத்துறையில் 8 இற்கும் அதிகமான மாணவர் (M.P.R.) துறை கிடைக்காத நிலையிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவை நியாயமான முறையில் நிவர்த்தி செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி ஜனாதிபதி, பிரதம மந்திரி, கல்வி அமைச்சர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் (U.G.C.) மற்றும் துணைவேந்தர் ஆகியோருக்கு மிகத் தெளிவான முறையில் கடந்த காலத் தெரிவுகளை விளக்கியும் இம்முறை நடைபெற்ற புறக்கணிப்பை விளக்கியும் தனிப்பட்ட முறையில் மகஜர் அனுப்பப்பட்டுள்ளன. இதன்போது கல்வியமைச்சினூடாக (U.G.C.) இடமிருந்து பொருத்தமான தீர்வினை ஒரு சில நாள்களில் பெற்றுத் தருவதாய் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் யாழ்.மாவட்ட அதிபர் சங்கம், அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் முன்வந்து கல்வி அமைச்சு, (U.G.C.) தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட முறையில் விரைவான - நியாயமான - தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இரசாயனப் பாடப் பல்தேர்வு வினாப்பத்திரம் மீள் திருத்தப்பட்டு மீண்டும் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினையைக் காரணம் காட்டி யாழ்.மாவட்ட மாணவர்களின் கோட்டாக் குறைப்பு மறைக்கப்பட்டு இழுத்தடித்துச் செல்லப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்பதை பாதிக்கப்பட்ட மாணவரமைப்பாகிய நாம் சுட்டிக்காட்டுகிறோம். ஆயினும் மேற்கூறப்பட்ட பிரச்சினையும் மாவட்டக் கோட்டாக் குறைப்புச் சம்பந்தமான பிரச்சினையும் பரஸ்பரம் ஒன்றுடனொன்று எதுவித தொடர்புமற்றவை என்பது தெட்டத் தெளிவான ஒன்றே.

எனவே இவ்விடயத்தில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினரிடமிருந்து -

1) ஒவ்வொரு துறைக்குமான தெரிவு அடிப்படை பற்றிய விவரங்கள் தெளிவுபடுத்தப்படவேண்டும் -

2) மிக விரைவிலான, உறுதியான தீர்வைப் பாதிக்கப்பட்ட மாணவர்களாகிய எமக்குப் பெற்றுத் தரவேண்டும் -

3) இம்முறை அகில இலங்கை ரீதியாக பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இருப்பதனால் யாழ். மாவட்டக் கோட்டாவிலும் நியாயமான அதிகரிப்பு இடம்பெறவேண்டும் -

4) 40 வீதம் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுதல் உறுதிப்படுத்தப்பட்டு திறமை அடைப்படைக்கான Z வெட்டுப்புள்ளி தெரியப்படுத்தப்படவேண்டும்.

5) எதிர்வரும் காலங்களிலும் இத்தகைய புறக்கணிப்புகள் நடைபெறமாட்டா என்பதை உறுதி செய்யவேண்டும் -

இம்முடிவுகளைச் செயற்படுத்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கல்விமான்களும், ஊடகங்களும் பாராமுகமாகயிராது அதிக சிரத்தையுடன் செயற்படவேண்டுமென பாதிக்கப்பட்ட மாணவர்களாகிய நாம் வேண்டி நிற்கின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

### நாளை

மார்கழி 27
புதன்கிழமை
11.01.2006
திதி: துவாதசி
பிற்பகல் 01.21 வரை
நட்சத்திரம் : ரோகிணி
மாலை 05.46 வரை
பிரதோஷவிரதம்
சுபநேரம் : 05.03 - 06.33
ராகுகாலம் : 12.33 - 02.03
[illegible]

### உதாவாக்கு

ஈசல்களுக்குச் சாயம் பூசி வண்ணாத்திப் பூச்சிகளாய் வார்த்திட முடியாது.

- வைரமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### லொறி விற்பனைக்கு

Ashok Leyland Comet Super ரக 47 - xxxx தொடரிலக்கமுடைய லொறி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777563659, ஆனந்தன், இராசவீதி, திருநெல்வேலி. (45180)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள நீரிறைக்கும் இயந்திரங்கள் வில்லியேர்ஸ் (England) MK 20, றொபின் MK 20 மற்றும் Double Door குளிர்சாதனப்பெட்டி (கடைக்கு உகந்தது) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: த.தர்மச்சந்திரன் 'அருளகம்' அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி வடக்கு. T.P.: 0776258191. (45164)

TVS GLX JZ xxxx தொடரிலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஒன்றும் Hero Honda JZxxxx தொடர் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P 0773248820. (45186)

40''x15'', 30''x20'' அளவுடைய இரும்புத்தூண், பனைமரம், தகரம் போன்றவற்றால் ஆக்கப்பட்ட இரண்டு கொட்டகைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776063173.(45184)

### நாய்க்குட்டிவிற்பனைக்கு

பொம்மேரியன் நாய்க்குட்டிகள் (மூன்று மாதம்) விற்பனைக்குண்டு. பிறவுணும் கறுப்பும் கலந்தது. தொடர்பு: றாஜன், 70/2, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம். (45181)

### CAPTURE CARDS CAMERAS

Matrox, Pinnacle, Canopus, Capture Devices with well designed Computers, one CCD Digital Camera, Stands, Lights, Audio and Insert Decks (Sony Panasonic) for sale. No. 220, Kandy Road, Jaffna. T.P.0773292259, (Near Pentacostal Mission). (45170)

### தவறிவிட்டது

சரவணபவன் கௌரீஸ்வரன் என்பவருடைய தே.அ.அட்டை, விண்ணப்ப அத்தாட்சிப் பத்திரம் (NA 229314) B.A. தம்பிலேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் வழியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்துதவவும். (45183)

அம்பனை மேற்கு, சுன்னாகம் என்ற முகவரியை உடைய அழகரெட்ணம் கஜேந்திரா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.762332159V) முறிகண்டியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.T.P. 0779196077 (45127)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 11.01.06 மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜீவ் -ஆனைக்கோட்டைச் சந்தி, ஜீவா - பண்டத்தரிப்பு சில்லாலை, K.P. ஸ்ரோர்ஸ் - இளவாலை, தாரகை - பருத்தித்துறை, றஞ்சீத் -517, ஸ்ரான்லி றோட். P.ரவி- சாவகச்சேரி. றாதா - மாவடி வட்டுக்கோட்டை, மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 2867. (45185)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

'பாலர் பாடசாலை' தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுத, வாசிக்க, கதைக்க, பயில No. 426(302), காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்.

(45190) THE ROYAL IS THE BEST (21.17.34)

### காணி விற்பனைக்கு

அளவெட்டியில் நல்ல சுற்றாடலில் வீடு கட்டக்கூடிய 3 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.தர்மச்சந்திரன் 'அருளகம்' அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி வடக்கு , T.P.: 0776258191. (45165)


### ஒத்தி வைப்பு

காரைநகர் உதவி அராசாங்க அதிபர் பணிமனையில் இன்று நடைபெறவிருந்த மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)


**புதிய வகுப்புகள் ஆரம்பம்**

STP
Your Partner in IT Solution

WHOவின் அனுசரணையுடன் எம்மால் நடாத்தப்பட்ட அரச ஊழியர்களுக்கான கணனிப் பயிற்சிநெறி காரணமாக பிற்போடப்பட்டிருந்த புதிய வகுப்புகள் அனைத்தும் 15/01/2006 லிருந்து ஆரம்பமாகின்றன.

Dip. in MS Office — Dip. in Hardware Technology
Dip. in Desktop Publishing — IC T

மிகக் குறைந்த கட்டணம் — தராதரமிக்க விரிவுரையாளர்கள்
போதியளவு பயிற்சிகள் — அரச அங்கீகாரமிக்க நிறுவனம்

STP Computer World (Pvt) Limited
73, Palaly Road, Kantharmadam Jaffna — Sankathanai Chavakachcheri

சிறுவர் பாதுகாப்பு இலங்கை நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் சிறுவர்களுக்கான இலவச கணனி நிலையத்திற்கான இரண்டாம் தொகுதி மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவிருப்பதால் ஆர்வமுள்ளோர் கிராம அபிவிருத்திச் சபையுடன் 25/01/2006ற்கு முன் தொடர்புகொள்ளவும்

Save the Children in Sri Lanka

- இயக்குநர் STP


## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, Minor Tender Board, University of Jaffna will receive sealed tenders from civil works contractors registered with ICTAD in Grade M 8 or above for Repairs and Painting to Three storey building and others at Faculty of Management Studies and Commerce, University of Jaffna.

Tender forms may be obtained from Assistant Registrar/ Administration University of Jaffna on Producing valid registration book and receipt for the cash payment for the following tender fees at the Shroff's Counter, University of Jaffna until 23.01.2006.

1. Refundable deposit Rs.25,000/-
2. Non-refundable deposit Rs. 500/-

Perfected tenders should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Chairman. Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 3 p.m. on 30.01.2006 and open immediately at 3.30 p.m after the time of closing.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Administration Branch of this University during office hours if necessary.

P.O.Box 57,
Thirunelvely, Jaffna.
06/01/2006 (C/47284)(21.17.34)

Registrar
University of Jaffna.

### பட்டப்பின் பரீட்சை ஆரம்பம்

யாழ்.பல்கலைக் கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சைகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகின.

பண்பாட்டியலில் முதுகலைமாணி மீள் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி முதலும்- கல்வியியல்மாணி இறுதிப்பரீட்சைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதலும்- ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தெரிவித்தார் (எ-12)


காலத்தின் தேவையறிந்து புதியதை அறிமுகம் செய்யும் சி.ஐ.சி இல்லத்தில் இருந்து உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு புதியதோர் வரப்பிரசாதம் பனிப் பூச்சியை ஒரேதடவையில் கட்டுப்படுத்த



**அக்டரா 25W.G**

உருளைக்கிழங்குப் பயிரில் அழுக்கணவனைக் கட்டுப்படுத்த



அனைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளையும் கட்டுப்படுத்தும்.
5gஅக்டரா 16l நீருக்கு போதுமானது

சி.ஐ.சி. இல்லம்
199, கியூவீதி,
கொழும்பு.

ஏகவிநியோகஸ்தர்கள்:
பழனி களஞ்சியம் [யாழ், நீர்வேலி]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10 ★ 07 ★ 1924

உதிர்வு 11 ★ 12 ★ 2005

### அமரர் சுப்பையா செல்லத்துரை

*திதி: 10.01.2006*

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஆலமரமாய் நீங்கள் இருக்க
அதன் விழுதுகளாய் நாம் இருந்தோம்
ஆலமரமும் சாய்ந்தது ஆனந்தமும் அடங்கியது.

*11.12.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (10.01.2006 ) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**

(45189) (39.34.21.17)

## நினைவு அஞ்சலி

நினைவில் நீங்காத எம் மதிப்புக்குரிய
அமரர்
**இரகுநாதக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்கள்**



*எங்கள் தேவஸ்தானத்தில் பூசகராக கடந்த 40 ஆண்டுகள் தெய்வீகப் பணியாற்றி எமது மக்களை வயிரவப் பெருமான்பால் பக்திகொள்ள வைத்து உயர்ந்த ஆன்மீக விழுமியங்கள் கொண்டவர்களாக இப்பாரினிலே திகழவைத்த அமரர் இரகுநாதக்குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள் அவர்களை இன்றைய அவரின் சபிண்டீகரண கிரியை நடைபெறும் நாளில் நன்றியுடன் நினைவு கூர்ந்து அவரின் ஆன்மா சாந்தியடைய வயிரவப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றோம்.*

மட்டுவில் கிழக்கு, ஞானவைரவர் தேவஸ்தான அடியார்கள்.
சாவகச்சேரி.

(45191)(21.17.32.34)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் செல்லம்மா



புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் செல்லம்மா அவர்கள் 08.01.2006 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- லட்சுமி தம்பதியரின்அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வைரவி தம்பதியரின் அன்பு மருமகளும் நாகேஸ்வரி தனபாலசிங்கம் (ஸ்ரீகிருஷ்ணா பேக்கரி, புத்தூர்), கணேசலிங்கம் (கிருஷ்ணா பேக்கரி, நீர்வேலி), குமாரசிங்கம் (கனடா), மங்களேஸ்வரி, சிவனேஸ்வரி, மகேஸ்வரி, மகேந்திரன் (பிரான்ஸ்), துரைசிங்கம் (கனடா), புலேந்திரன் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயும் அசோக் (M.P.C.S பருத்தித்துறை), கலைச்செல்வி, ஜெகதீஸ்வரி, சாந்தகுமாரி (கனடா), பிரேமநாதன்,(M.P.C.S அச்சுவேலி) சிவனேசன் (Water Supply Trinco.), சிவசுந்தரம் , சந்திராதேவி (பிரான்ஸ்), புவனேந்திரராணி (கனடா), ரோகினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் கார்த்திகா, அரவிந்தன், பிரதாப், மதனகா, திலக்ஷிகா, கோபிகா, கீர்த்திகா, பத்மஜா, ஹம்சுஜா,ரமணுஜா, பிரவீன், மதுஷா (கனடா), மயூரணி, கஜீவன், ரேனோஷா, ஹமசுதன், வேணுஜா, வினோஜா, சாருஜன், அட்ஷயா (கனடா), கீர்த்தினி, தனுஷன், பானுஜன், பானுஜா, அர்ச்சனா, சாரகா, விதுர்ஷன் (பிரான்ஸ்), சந்தோஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2006) புதன் கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திராணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல்:
**பிள்ளைகள்.**

(45188) (39-21-34-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு தமிழருடன் மலையகக் கட்சிகள் இணைந்து செயற்படுவது நம்பிக்கை தருகிறது

## சந்திரசேகரனிடம் கலைஞர் கருணாநிதி தெரிவிப்பு

மலைய மக்கள் முன்னணியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளோடும் விடுதலைப் புலிகளோடும் புரிந்துணர்வை ஏற்படுத்தி செயற்பட ஆரம்பித்திருப்பது புதிய நம்பிக்கையையும் திருப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள கலைஞர் மு.கருணாநிதியின் கோபாலபுரம் இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன் சந்தித்து உரையாடிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் தற்போது உருவாகி வருகின்ற யுத்தச் சூழலில் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு தனக்கு மிகுந்த கவலையை அளிப்பதாகத் தெரிவித்த கலைஞர் கருணாநிதி, இலங்கை வாழ். சகல தமிழ் மக்களும் உரிமையோடு வாழ்கின்ற நிலைமை நிரந்தரமாக ஏற்படுவதையே தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் பாதுகாப்புப் பொதுக்கூட்டத்தில் அதன் ஏற்பாட்டாளர்களான வைகோ, கி.வீரமணி, இராமதாஸ், பழ.நெடுமாறன் ஆகியோரால் வலியுறுத்தப்பட்ட தீர்மானத்தில் தனக்கு எதுவிதமான முரண்பட்ட கருத்துகளும் இல்லை எனத் தெரிவித்த கருணாநிதி, அடுத்த வாரம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கும் போது ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாகவும் அர்த்தமற்ற கைதுகள் தொடர்பாகவும் அவருக்கு எடுத்துக்கூற உள்ளதாகவும் சந்திரசேகரனிடம் கூறியுள்ளார்.

தமிழ் அரசியல் குழுக்களுக்கு இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளதைக் கண்டு மனம் நொந்துள்ளதாகவும் ஆனால், தற்போது மலையக மக்கள் முன்னணியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளோடும் விடுதலைப் புலிகளோடும் புரிந்துணர்வை ஏற்படுத்திச் செயற்பட ஆரம்பித்திருப்பது புதிய நம்பிக்கையையும் திருப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

ஈழத்தமிழர்கள் மற்றும் இந்திய வம்சாவழித் தமிழர்கள் விவகாரத்தில் தமிழகம் தொடர்ந்து பார்வையாளர்களாக இருக்க விரும்பாது என்றும் தமது சக்திக்கு உட்பட்ட சகல முயற்சிகளிலும் பங்களிப்பினை முழுமையாகச் செலுத்தத் தயாராக இருப்பதாகவும் கலைஞர் கருணாநிதி இந்தச் சந்திப்பின் போது சந்திரசேகரனிடம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டுக்குச் சென்றுள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவையும் சந்தித்துப் பேசினார். (த)

## தபால் திணைக்கள ஊழியருக்கு அ. அட்டை வழங்க ஏற்பாடு

நல்லூர், ஜன.10

யாழ்ப்பாணம் தபால் திணைக்களத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களில் இதுவரை தமக்குரிய திணைக்களப்பதவிகளுக்கான அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்க வடபகுதி பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் ப.குமரகுரு நடவடிக்கை எடுத்துள்ளார்.

தபால் திணைக்களத்தில் தற்காலிக நியமனம் பெற்ற சிற்றூழியர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்றும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-111)



தென்மராட்சி லயன்ஸ் கழக அங்குரார்ப்பண நிகழ்வில் புதிய தலைவர் லயன் அ.திருநாவுக்கரசுவுக்கு தலைவருக்குரிய பதக்கத்தினை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் அணிவிப்பதையும், அருகில் சர்வதேச லயன்ஸ் கழக 306பி மாவட்ட இணைப்பாளர் லயன் தே.வி.முத்துக்குமாரசாமி சத்தியப்பிரமாணம் வாசிப்பதையும் முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள் : தென்மராட்சி செய்தியாளர்)

## பிரதேசசெயலர், கிராம அலுவலர் ஒப்பத்துடன் வலி.மேற்கில் தற்காலிக அ.அட்டை விநியோகம்

சங்கானை,ஜன.10

பிரதேச செயலர், கிராம சேவை அலுவலர் ஆகியோரினால் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திய தற்காலிக அடையாள அட்டைகளை வழங்கும் பணியை வலி.மேற்கு பிரதேச செயலகம் ஆரம்பித்துவருகின்றது.

தேசிய அடையாள அட்டையை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களும் 15 முதல் 16 வயதிற்குட்பட்டவர்களும் இதன்மூலம் தற்போதைய சூழ்நிலையில் நன்மை பெறக் கூடியதாகவுள்ளது என்று கூறப்பட்டது.

இதற்கான விண்ணப்பங்களை கிராம சேவை அலுவலரிடமிருந்து பெற்று, தத்தமது புகைப்படத்துடன் பூரணப்படுத்தி அவற்றை ஒப்படைத்தால், அதனைப் பிரதேச செயலரும், கிராம சேவையாளரும் உறுதிப்படுத்தி வழங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை கடந்த சிலவருடங்களாக இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-29)

## ஓய்வூதியர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.10

வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதியும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரனும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலக கணக்காளர் செல்வி இ.கலைச்செல்வியும் கலந்து கொள்வர்.

வலி.வடக்கு ஓய்வூதியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(எ-204)

## கோயிலாக்கண்டி மத்தி, கைதடி தெற்கில் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் திறப்பு

தென்மராட்சி,ஜன.10

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் மேலும் இரு கிளைக் கடைகளை ஆரம்பித்துள்ளனர்.

கோயிலாக்கண்டி மத்தி, கைதடி தெற்கு ஆகிய இரு இடங்களிலும் தனியார் வீடுகளில் கிளைக்கடைகளை ஆரம்பித்துள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

கைதடி சந்தியில் இயங்கிவந்த நான்காம் இலக்கக் கிளையினை மக்கள் செறிந்து வாழும் கைதடி தெற்கிலும் -

யுத்த அனர்த்தங்களின் போது சேதமடைந்த கோயிலாக்கண்டி மத்தி கிளையினை மீண்டும் ஆரம்பிக்கக் கோரி அப்பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து அங்குள்ள தனியார் வீடுகளில் கிளைக் கடைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-117)

## சாவகச்சேரியில் மற்றொரு கிராமிய வங்கி திறப்பு

தென்மராட்சி,ஜன.10

சாவகச்சேரியில் மேலும் ஒரு கிராமிய வங்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் கடந்த முதலாம் திகதி தொடக்கம் கிராமிய வங்கியை ஆரம்பித்துள்ளனர்.

சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள் இந்த வங்கி ஊடாக வழங்கப்பட்டு வருவதாகவும் -

வெளியார் இந்த வங்கியில் சேமிப்புக் கணக்கினை ஆரம்பிக்கவும், ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுக்கவும்-

ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்க முகாமையாளர் வே.கிருஷ்ணன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஏற்கனவே கிராமிய வங்கி ஒன்று நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(எ-117)

## மாதகல் சம்வில்துறை மதகு பலத்த சேதமடைந்த நிலையில்!

வலி.தென்மேற்கு, ஜன.10

பண்டத்தரிப்பிலிருந்து சில்லாலை ஊடாக மாதகல் வரை செல்லும் சம்வில்துறை வீதியிலுள்ள கழுதாப்பிள்ளை மதகு என்றழைக்கப்படும் மதகு பலத்த சேதமடைந்த நிலையில் இருந்து வருகின்றது.

இதனால், வயர் காணிகளிலுள்ள மித மிஞ்சிய வெள்ள நீர் கடலுக்குச் செல்வதற்கு முடியாத நிலையில் இருப்பதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.

கடந்த யுத்தகால அனர்த்தங்களின்போது சேதமடைந்த இந்த மதகைத் திருத்தித் தருமாறு மாதகல் விவசாயிகள் சம்மேளனம் யாழ். வீதிகள் அபிவிருத்தி அதிகார சபையிடம் கடித மூலம் கோரிக்கைவிடுத்துள்ளது.

2004ஆம் ஆண்டு இந்த மதகை திருத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் கடிதமூலம் யாழ். வீதிகள் அபிவிருத்தி அதிகார சபையினருக்கு வேண்டுகோள்விடுத்திருந்தனர். விரைவில் புனரமைப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்று திணைக்களத்தினால் பதில் கடிதம் அனுப்பப்பட்டும் ஒரு வருட காலமாகியும் இதுவரை இந்த மதகு திருத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-135)



பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரிக்கு அதன் பழைய மாணவியும் பருத்தித்துறை காணி பதிவக மேலதிக மாவட்டப் பதிவாளருமான திருமதி எஸ். தியாகராஜா ஒலி பெருக்கி சாதனங்களை அதிபர் திருமதி எஸ்.சண்முகநாதனிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

## கால்நடைகளைக் கடிக்கும் கட்டாக்காலி நாய்கள்

வலி.மேற்கு, ஜன.10

பண்டத்தரிப்பு பகுதியில் கட்டாக்காலி நாய்களின் உபத்திரவம் அதிகரித்துள்ளது.

கட்டாக்காலி நாய்கள் கூட்டம் கூட்டமாக வந்து இங்குள்ள காணிகளில் மேச்சலுக்காகக் கட்டப்பட்டிருக்கும் ஆடுகளைக் கடித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், பொதுமக்கள் தங்களது ஆடுகளை வீடுகளில் கட்டி வளர்த்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை - பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள கட்டாக்காலி நாய்களை இம்மாத நடுப்பகுதியில் பிடித்து அழிப்பதற்கு தாம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என். [illegible] தெரிவித்தார். (எ-135)

## கும்பாபிஷேக தின தீப ஒளிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.10

மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் இராஜகோபுர கும்பாபிஷேக தின தீப ஒளிவிழா எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10.30 மணிக்கு சங்காபிஷேகம் விசேட பூசை என்பன இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து மங்கள தரிசன ஆராதனை இடம்பெறும்.

தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிவரை ஆராதனைகளும் இடம்பெறும். (எ-14)

## நல்லூர் கோட்ட அதிபர்களின் கூட்டத்திகதிகள் அறிவிப்பு

குருநகர்,ஜன.10

நல்லூர் கோட்டப்பாடசாலை அதிபர்களுக்காக இவ்வாண்டு நடைபெறவுள்ள கூட்டங்கள் பற்றிய திகதிகளை நல்லூர்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர்கேவிகுணசேகரம்அறிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை, பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மார்ச் மாதம் 15 ஆம் திகதி புதன்கிழமை, மே மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை, ஜூன் மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை, ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய நாள்களில் நல்லூர் கோட்டக்கல்விப் பணிமனையில் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் கூட்டம் நடைபெறும் என்று- அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-51)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# காரைநகர் ஈழத்துச் சிதம்ப
# வெள்ளோட்டவிழா சிறப்

## காரைநகர் மண்ணுக்கு பெருமை சேர்க்கும் நிகழ்வு



அன்புசால் பெருந்தகையீர்....

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் கோயில் கொண்டிருக்கும் ஆடவல்லானுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சிற்பத்தேர் வெள்ளோட்டவிழா இன்று நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்

மனித வாழ்வில் உயர்நிலையத் தரக்ககூடியது இறைவழிபாடு. அதனை நமக்கு ஏற்படுத்துவது ஆலயங்கள். இந்த ஆலயங்களில் நடைபெறும் பூசைகளும், விழாக்களும் மனிதன் சிந்தித்து நல்லபடி வாழ - நல்லசிந்தனைகள் ஊற்றெடுக்க வழிவகுக்கின்றன. இந்த சிந்தனையை தமது வாழ்நாளில் அன்றுமுதல் இன்றுவரை கடைப்பிடித்து வருபவர்கள் காரைநகர் மக்கள். காரைநகர் மக்களின் வாழ்வு சைவ வாழ்வு. இன்னொரு வகையில் கூறின் சைவ ஆசாரங்களுடன் கூடிய வாழ்வு. எந்தநாளும் விரதம், அனுட்டானம், அறப்பணி என்று சிந்தித்து வாழ்பவர்கள் அவர்கள். இவ்வாறு தமக்கென தாமே சமய வாழ்வை உருவாக்கி அதன்வழியில் தமது சந்ததியையும் வாழவைக்கும் காரைநகர் மக்கள் தம்மை நாளாந்தம் வாழவைக்கும் ஈழத்துச் சிதம்பர ப் பெருமானுக்கு அவன் விரும்பியபடியே சிற்பத்தேரை நிர்மாணித்து இன்று மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்றனர்.

இன்று இடம்பெறும் சிற்பத்தேர் வெள்ளோட்டம், காரைநகர் மண்ணுக்கும், சைவத்தமிழ் உலகிற்கும் பெருமைசேர்க்கும் வரலாற்று நிகழ்வும் கூட.

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தியாகராஜா மகேஸ்வரன் அவர்களின் எண்ணத்தில் பிறந்த இந்த சிற்பத்தேர் மிகவும் குறுகிய காலத்தில் - நிறைந்த செலவில் - முழுமையான சிற்ப சாஸ்திர விதிகளை உள்ளடக்கியதாக முழுமை பெற்றிருக்கின்றது.

இந்திய, ஈழத்துச் சிற்பாச்சாரியார்கள் பலரும் இணைந்து விஸ்வப்பிரம்மஸ்ரீ சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்களின் தலைமையில் இந்தச் சிற்பத்தேரை நிர்மாணித்திருக்கின்றனர். ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் வரலாறு, ஆடவல்லானின் அற்புதங்கள் - தாண்டவங்கள் என்பன இந்தத் திருத்தேரில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளமையை அறிந்து பெரும் மகிழ்ச்சி அடைந்தேன். இன்று நடைபெறும் வெள்ளோட்டம் சிறப்புறவும் எதிர்வரும் வியாழனன்று நடைபெறும் தேர்த்திருவிழா சிறப்புறவும் எல்லாம்வல்ல பரம்பொருளை வேண்டி அமைகின்றேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீனம்
நல்லூர்.

இரண்டாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.



## ஆடல் வல்லானுக்கு புதிய சிற்பத்தேர்: எனக்குக் கிடைத்த பெரும்பேறு



எல்லாம் வல்ல முழுமுதல் பரம்பொருளான தில்லைக் கூத்தனின் பாதாரவிந்தங்களுக்கு ஒருகோடி நமஸ்காரங்கள்.

சிவபூமியான காரைநகர் பதியில் கோயில் கொண்டுள்ள சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு ஒரு புதிய சிற்பத்தேரை மிகவும் பிரமாண்டமானமுறையில் ஆகம விதிப்படி அமைக்கவேண்டும் என்ற எமது முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தியாகராஜா மகேஸ்வரனின் வேண்டுகோளை ஏற்று எம்பெருமானின் துணையுடன் இந்தப் பணி நிறைவேற்றியிருக்கின்றது.

ஆடல் வல்லானின் அற்புதத் தாண்டவங்கள் 108ஐயும் தன்னகத்தே கொண்டதாக இப்பெரும் தேர் உருவாகி இன்று வெள்ளோட்டம் காணத்தயாராகவிருக்கின்றது. இப்பெரும் திருப்பணியில் ஈடுபடுவதற்கு மிகவும் சிறியோனான என்னைத் தேர்ந்தெடுத்த அந்தக் கூத்தப்பிரானின் திருவருளை எண்ணி மனம் ஆனந்தக் கூத்தாடுகிறது. இந்தத் திருப்பணிக்கு பலவகையிலும் துணைநின்ற அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

ஜனா சிற்பாலயம்

ஸ்தபதி சரவணமுத்து
ஜெயகாந்தன்.

## நல்ல சகுனத்துடன் ஆரம்பமான கைங்கரியம்

ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்து அரசோச்சும் தில்லைக் கூத்தனுக்குப் புதிய சிற்பத் திருத்தேர் வெள்ளோட்டம் நடைபெறுவது உள்ளத்தை ஆனந்தக் கடலில் ஆழ்த்துகின்றது. ஒரு இக்கட்டான காலகட்டத்தில் எம்பெருமானின் இந்தத் திருப்பணி நிறைவு பெற்றிருப்பதை நினைந்து அவன் கருணையை எண்ணி புளகாங்கிதம் அடைகின்றோம்.

தில்லைக்கூத்தனின் திருத்தேர் அமைப்பு பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் போது ஆசிதருமாப் போல் தைப்பூச நீராடி வந்த கந்தன் கருணை தந்ததும் -

பவளக்கால் நாட்டலின்போது அன்பர்கள் எழுப்பிய ஓம் நமசிவாய என்ற திருமந்திரத்தின் திருக்கோசமும் வானோங்க ஒலித்ததும் இன்று நினைத்தாலும் நெஞ்சம் நெகிழ வைத்துக் கண்ணில் நீர் பனிக்கின்றது.


பவளக்கால் நாட்டலில் சிற்பாசாரியார் காட்டிய பக்தியும் பவிசும் அன்றே எந்தவித சிரமமுமின்றி, தடையின்றி தேர் உருவாகி ஓடும் காட்சியை உருவாக்கிவிட்டது.

அவ்வளவு திறமையும் பணிவும் பண்பும் வாய்ந்த சிற்பாசாரியார், அவரது உதவியாளர்கள் இந்தத் திருத்தேர் அமைக்க எண்ணியவர்கள், அமைத்தவர்கள், கொடையாளர்கள், தில்லைக்கூத்தன் இத்திருத்தேரில் பவனிவரும் காட்சியைக் காண்பவர்கள் நினைப்பவர்கள் யாபேரும் அவன் திருவருட் கடாட்சத்தால் நிறைவாழ்வு காண அவனடி பிரார்த்தித்து அமைகின்றேன்.

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

தொண்டுக்குரிய K.K.K. சிவபாலன் (பொருளாளர்)
மணிவாசகர் மடாலய அன்னதான சபை, காரைநகர்.

## கூத்தப் பிரானுக்கு ...
## ஆண்டிகேணி ஐயனாரு...



ஜனா சிற்பக் கலைக் கூட சி... யில் ஈழத்து, இந்திய சிற்பாசாரிய... மிக உயர்ந்த சிற்பத் தேர்களில் ... சிற்பத் தேர் அமைக்கப்பட்டுள்ள...

இந்தத் தேரில் ஈழத்துச் சித... வைரவர் ஆலய வரலாறு, நடரா... 64 திருவிளையாடல்கள், 63 நா... வடிவங்கள், புராதன இதிகாச ... பெரும் கோயில், மதுரை மீ... மிகப்பெரிய சிவதலங்களின் ... மேற்பட்ட சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.


அத்துடன், 1008 மணிகளும் தங்கக் கலசமும் தே... வரலாறும் இந்தத் தேரிற்கு அழகு சேர்க்கின்றன.


இந்த அழகிய சிற்பத் தேரில் தில்லைநடராஜப் பெ... நாளை மறுதினம் பவனிவரவுள்ளார். இவ்வாலயத்தில்... வாதிரை உற்சவம் வேறு எந்த ஆலயத்திலும் நடைபெ...

காரைநகர் மக்கள் நீண்ட காலமாக திருவாதிரை உ... விழாவாகச் செய்துவருகின்றனர் அவற்றில் நட... அபிஷேகமும் சிறப்பு வாய்ந்தவை.

அத்துடன், ஆண்டி கேணி ஐயனாருக்கும் புதிய சி... டிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன். எதி... (14.01.2006) மகரஜோதிப்பெருவிழா அன்று புதிய சி... விழா ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெறவுள்ளது.

இத்தகைய புனிதப் பணியை முன்னெடுப்பதற்கு ப... தனையுடன் செயற்பட்ட அனைவருக்கும் மனமார்ந்...






**குமரன் சில்க்ஸ்,**
இல.91, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**கணேசன் ஸ்ரோஸ்,**
இல. 201,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**சீமாட்டி புடைவைக்கூடல்,**
இல.122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூ ராகம்ஸ் பட்டுச்சோலை,**
இல.7,8 நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

**மகாநதி ரெக்ஸ்,**
இல.16, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

**T.சங்கரப்பிள்ளை அன்சன்ஸ்,**
இல.21, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
இல.105, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்,**
இல.41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**T.குமாரசாமி ரெக்ஸ்ரைல்,**
இல.44, 42 பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**மகாராணி பட்டுச்சோலை,**
இல.50, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| **சிங்கப்பூர் ஜுவலறி,** இல.93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **வெங்கடேஸ்வரா,** இல.79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **ஈஸ்வரன் றேடர்ஸ்,** இல.69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **திருமுருகன் கொம் நெற்,** இல.259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | |
| **SRI MURUGAN, Communication** & Agency Post Office, No.303, K.K.S.Road, Jaffna. | **லலிதா புடைவை மாளிகை,** இல.5,6 நவீனசந்தை, யாழ்ப்பாணம். | **இ.ச.பேரம்பலம் சகநிறுவனம்,** இல.50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | **சிறீ மாதவன்,** இல.97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | எ |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம்பரம் புதிய சிற்பத்தேர்
# ...றப்புமலர் - 10.01.2006





## நாகர வடிவத்தில் அமைந்த தேர்



'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்பது முதறிஞர் வாக்கு. வேதமும் நெறியும் தழைத்தோங்க, சைவமும் அதுசார் துறையும் வளர்ச்சியடையஆலயங்கள் உதவுகின்றன.

இவ்வகையில் ஈழத்துச் சிதம்பரம் என்று நாமம் சூட்டப்பட்டுள்ள காரைநகர் சிவன் கோயிலுக்கு சிற்பத்தேர் நாகர வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் பிறந்ததையிட்டு அனைவரும் பெருமை அடைய வேண்டும். சைவசமயம் சிவபெருமான் ஒருவரையே முழுமுதற் கடவுளாகக்கொண்டுள்ளது. 'ஏகப் பராத்மா பகுதேக வர்த்தி' பரமாத்மா ஒருவர் வடிவங்களே பலவாகும் என்பதே இதன்பொருள்.

மகோற்சவ காலத்தில் அழித்தல் தொழிலை உணர்த்துவதே ரதோற்சவமாகும். இந்த ஆலயத்தின் சிறப்பில் திருவெம்பாவை'உற்சவம் இரு நேரங்கள் நடைபெறுவதும் ஒதப்படுவதும் சிறப்பாகும். ரத உற்சவத்தில் உண்மைப் பொருளை உணர்த்த, தெளிவுபடுத்த ஆகம முறைப்படி அமையப் பெற்ற ரதம் ஆலய அமைப்பில் முக்கியம் பெறுகின்றது. ரத வெள்ளோட்டத்தை நிறைவு செய்யவரும் இம்மலர் சிறப்பாக அமைய வாழ்த்துவதுடன் இன்னும் திருப்பணிகள் சிறப்பாகத் தொடர வாழ்த்துகின்றேன்.

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர்.

சிவப்பிரமஸ்ரீ வி.ஈஸ்வரக் குருக்கள்
ஆலயப் பிரதம குரு.

## மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமைந்த ஆலயம்





சைவமும் தமிழும் உயர்ந்துவிளங்கும் காரைநகரில் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோயிலில் ஆடல் புரியும் ஆனந்தக் கூத்தனுக்கு அமைக்கப்பட்ட புதிய சிற்பத்தேரின் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுவதையிட்டு அளவில்லா ஆனந்தம் அடைகின்றோம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்று வடமொழி வேதசிவாகமநெறி தவறாது பூசைவழிபாடுகள் நடைபெறும் ஈழத்துச் சிதம்பர புண்ணிய ஷேத்திரத்தில் வருடத்தில் மூன்று முறை நடைபெறும் மகோற்சவத்தில் சாந்தீக மகோற்சவமாகிய திருவெம்பாவை உற்சவம் மிகச் சிறப்பாகநடைபெறுகிறது.

இந்த உற்சவத்தில்நாளைமறுதினம் நடராஜப் பெருமான் புதிய சிற்பத் தேரில் பவனி வரவுள்ளார். இன்று நடைபெறுகின்ற புதிய சிற்பத்தேர் வெள்ளோட்ட விழாவையும் நாளைமறுதினம் நடைபெறவுள்ள பஞ்சரத பவனியையும் அடியார்கள் அனைவரும் கண்டுகளித்து சகல சௌபாக்கியங்களோடும் வாழ எம் பெருமானின் திருவருளை இறைஞ்சி ஆசி கூறுகின்றோம்.

ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம் ஆதீன கர்த்தாக்கள் - ஈழத்துச்சிதம்பரம், காரைநகர்.

## செயற்கரிய செயலால் நிமிர்ந்து நிற்கும் தேர்



காரைநகர் திண்ணபுரத்திலிருந்து அருளாட்சி செய்யும் ஈழத்துச் சிதம்பரக் கூத்தப் பெருமான் பவனிவர புதிதாக அமைக்கப்பட்ட மிக உயரமான ஆழகிய சிற்பத்தேர் வெள்ளோட்டம் நடைபெறவிருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு புளகாங்கிதமடைகின்றேன். எம்பெருமானின் புதிய சித்திரத்தேரில் நூற்றெட்டு சிவதாண்டவமும் நாயன்மார்களின் வரலாறும் இருபத்தைந்து மகேஸ்வர வடிவங்களும் காட்சியளிக்கின்றன. ஈழத்திலேயே மிக உயரமான இத்தேரின் விமானம் அழகிய துணி வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளமை சிறப்புடையதாகும்.

சர்வேஸ்வரன் தேரேறி பவனிவரும் உற்சவம் பஞ்சகிருத்தியங்களில் ஒன்றாகிய அழித்தல் தொழிலை உணர்த்தி நிற்பதாகும். எம்மிடம் குடிகொண்டுள்ள நான் - எனது என்னும் அகங்கார மமகாரங்களால் விளையும் தீவினைகளை அழித்து எம்மைத் தூயவர்களாக்கி அருள்பாலிக்கும் விழாவாகும். சிவப்பணி யாவராலும்செய்யக் கூடிய பணியல்ல. அவனருளாலே அவன்தாள்பணிவது போல அவனருள் பெற்றவரால்தான் இத்தகைய பெரும்பணியை தனித்துநின்று நிறைவேற்றமுடியும்.

அவனருள் பெற்ற தியாகராஜா மகேஸ்வரனை இன்றைய தினத்தில் மனமார வாழ்த்துவதோடு சித்திர வேலைப் பாடுகளுடன் அழகிய தேரினை உருவாக்கிய சிற்பக் கலைஞர்களையும் வாழ்த்துகின்றேன். தேர் வெள்ளோட்ட விழா சிறப்பாக நடைபெறவும் எல்லோரும் இறையருள் பெறவும் எம்பெருமானை வழுத்துகின்றேன்.

மு.அ.வேலாயுதபிள்ளை தலைவர் காரைநகர் மணிவாசகர் சபை.

## நினைவில் நிற்கும் ஆடவல்லானின் அற்புதம்

ஈழத்துச் சிதம்பரத்தில் கோயில்கொண்டுள்ள கூத்தப்பிரான் அற்புதங்கள் பலபுரிபவன். தன்னை நம்பி வழிபடுபவர்களுக்கு வேண்டுவன ஈயும் பெருந்தகை. இதனை கடந்த வருடம் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் போது உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆசிய நாடுகளில் பல இலட்சக்கணக்கானோரை குடும்பம், குடும்பமாகக் காவு கொண்ட ஆழிப்பேரலை காரைநகரையும் விட்டு வைக்கவில்லை. இத்தகைய கொடூரம் நிகழ்ந்த வேளை கூத்தப்பிரானின் ஆலயத்தில் பஞ்சரதங்கள் வீதிவலம்வந்து கொண்டிருந்தன. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயச் சூழலில் குழுமியிருந்தனர். ஆனால், காரைநகர் கசூரினா கடற்கரை மட்டும் வந்து சுனாமி அலைகள் அப்பகுதியில் சேதங்களை ஏற்படுத்திவிட்டு அகன்று விட்டன. இந்த அலைகள் கடற்கரைக்கு மிகவும் சமீபமாகவுள்ள ஈழத்துச் சிதம்பரச் சுற்றாடலை அணுகவேனும் இல்லை. அன்றைய தினம் காரைநகர் உதவி அரச அதிபருடன் கடமை நிமித்தம் ஆலயச்சூழலில் நின்றவேளை இதனை உணர்ந்துகொள்ள முடிந்தது.

இத்தகைய அற்புதங்கள் புரியும் ஆடவல்லானுக்கு அழகிய சிற்பத்தேர் நிர்மாணிக்கப்பட்டு இன்று அது வெள்ளோட்டம் காண்கிறது. இந்தத் திருத்தேரை ஆகமவிதிப்படி நிர்மாணிப்பதில் அல்லும்பகலுமாக உழைத்த சிற்பாசாரியார்கள் பாராட்டப்படவேண்டியவர்கள். இவை அனைத்துக்கும் மேலாக இந்த சிற்பத்தேரை நிர்மாணிக்க வேண்டும் என்ற சிந்தனையை உள்வாங்கி அதனை செயலுருவில் நிறைவேற்றி இன்று ஆடவல்லானின் அருள் கருணைக்கு உள்ளாகியுள்ள எமது முன்னாள் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் பாராட்டப்படவேண்டியவர். சமயத்துக்காக அவர் ஆற்றிய பணிகளை இந்த உலகம் அறியும். அந்தப்பணிகளில் ஒன்றே இந்த மாபெரும் கைங்கரியம்.

உதவி அரச அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை - காரைநகர்.

சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர்
இ.நித்தியானந்தன் - பண்பாட்டு அலுவலர்,

## ...ுக்கு அடுத்தபடியாக
## ...யனாருக்கும் சிற்பத்தேர்

...கலைக் கூட சிற்பாசாரியார் ஜெயகாந்தன் தலைமை ...திய சிற்பாசாரியர்களின் கைவண்ணத்தில் ஈழத்திலேயே ...ற்பத் தேர்களில் ஒன்றாக - 39 அடி உயரத்தில் இந்தச் ...மக்கப்பட்டுள்ளது.

...ல் ஈழத்துச் சிதம்பர ஆலய வரலாறு, தினகரன் பிட்டி ...வரலாறு, நடராஜப் பெருமானது 108 தாண்டவங்கள், ...டல்கள், 63 நாயன்மார்களின் வரலாறு, 25 மகேஸ்வர ...ாதன இதிகாச வரலாறு மற்றும் சிதம்பரம், தஞ்சைப் ...ப், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் உள்ளிட்ட ...தலங்களின் தோற்றங்கள் அடங்கலாக 300இற்கும் ...ள்ளன.

...க் கலசமும் தேர் சீலைகளில் பொறிக்கப்பட்ட ஆலய ...க்கின்றன.

...ல்லநடராஜப் பெருமான் திருவாதிரைப் பெருவிழாவில் ...இவ்வாலயத்தில் நடைபெறுவது போன்று ஈழத்தில் திரு ...த்திலும் நடைபெறுவதில்லை.

...க திருவாதிரை உற்சவத்தை ஈழத்துச் சிதம்பரத்தில் பெரு ...அவற்றில் நடராஜர் இரதாரோகணமும் ஆருத்திரா ...

...ருக்கும் புதிய சிற்பத் தேரினை அமைப்பதற்கான நடவ ...கின்றேன். எதிர்வரும்தைத்திங்கள் முதலாம் நாள் ...அன்று புதிய சிற்பத்தேர் அமைப்பதற்கான கால்கோல் ...றவுள்ளது.

...னெடுப்பதற்கு பல்வேறு வகையிலும் அர்ப்பணிப்புச் சிந் ...கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் கட்டு



...மாணப் பணிகளில் தம்மை முழுமையாக இணைத்துக் கொண்ட கலைஞர்கள், ஆர்வலர்கள், இறைபணியாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைக் கூறுகின்றேன்.

தி.மகேஸ்வரன்,
(முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர்,
நாடாளுமன்ற உறுப்பினர் - கொழும்பு மாவட்டம்)


நவம் ரெக்ஸ்
இல.10, ஜீபிலி பஜார்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

கலைமகள் வர்த்தக நிலையம்,
இல.316, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்,
இல.147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அம்பாள் மில்,
மில் வீதி,
இடைப்பிட்டி, காரைநகர்.

க.கு.கந்தையாபிள்ளை அன்சன்,
318 (124), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அமுதன் போதிபோக்குவரத்து சேவை
(கொழும்பு - யாழ்ப்பாணம்)
கருங்காலி, காரைநகர்.

யாழகம்,
இல.568, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

அற்புதா ரேடிங்கொம்பனி,
இல.198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

விஜிதா ரெக்ஸ்ரைல்,
இல.109, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

தனம் ரெக்ஸ்,
22A, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

...நற்,

மலர்வடிவமைப்பு:
காரைநகர் செய்தியாளர்

T.குமாரசாமி அன்சன்ஸ்,
இல.248/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

குகன் ஸ்ரோஸ்,
இல.180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

P.R.ENTERPRISE,
NO.14, JUBILEE BAZAAR,
Power House Road,
Jaffna.

எஸ்.எஸ்.என்ரபிறைசஸ்,
இல.321, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்,
இல.20, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

மலர் ரெக்ஸ்,
இல.18, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

அல்டி எலெக்ரோனிக்ஸ்,
இல.15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழீழம் மலர தமிழகம் திரண்டெழுகிறது தமிழக மக்களின் குரலுக்கு டெல்லியும் செவிசாய்ப்பு

தமிழீழம் மலர தமிழகம் திரண்டு வருகின்றது. டில்லியிலும் மனமாற்றம் ஏற்படுகிறது. கடல் கடந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் கண்ணீர் துடைக்கின்ற காவல் தெய்வம் கலைஞரும் எமக்காக ஓங்கிக் குரல் எழுப்புகின்றார். கலைஞரின் வீரவாள், வையமேற்றும் வைகோவின் குரலுக்கும் புதுடெல்லி செவிசாய்க்கத் தொடங்கியுள்ளது.

வைகோ அவர்கள் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் அவர்களுடன் உரையாடிய போது "தமிழ் மக்களின் உரிமைக்காக போராட்டத்தில் அமைதிப்பேச்சுக்காக இலங்கை அரசுக்கு புலிகள் பல சந்தர்ப்பத்தைக் கொடுத்துவிட்டார்கள். இதற்கு மேலும் பேச்சுக்காக காலத்தை இழுத்தடிப்பது அரசின் சதிவலைக்குள் புலிகளை சிக்க வைப்பதாகும். தமிழன் கோழையும் அல்ல ஏமாளியும் அல்ல என்பதைப் புலிகள் உலகத்திற்கு நிரூபித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் தமிழன் புதுவாழ்வு பெற வேண்டும் என்பதில் இன ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் தமிழக மக்கள் ஒருமித்த கருத்தில் உள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது" என்று புலிகளின் போர்க்கோல உணர்வையும் ஸ்ரீ லங்கா அரசின் ஏமாற்றுப் போக்கையும் வைகோ அவர்கள் அப்படியே படம்பிடித்துக்காட்டியிருப்பது அவரின் அரசியல் ஆழத்திற்கு அரிய எடுத்துக் காட்டாகும்.

வீரத்தின் விளைநிலம் வீரமணி தன் "விடுதலை இதழில்" ஈழத்தமிழர் இன்னல் பற்றி தீட்டி வரும் கட்டுரைகள் தீப்பொறியாக பறக்கத் தொடங்கி உள்ளன. ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 26 தமிழர்களை மீட்ட நெடுமாறனின் பெருமை நிலமிசை நீடு வாழும். நிலைத்த கொள்கை உறுதி படைத்த நின்றசீர் நெடுமாறனின் தொலை நோக்குச் சிந்தனையும் எம் தொல்லையை நீக்கத் துணை நிற்கிறது.

"பாட்டாளி மக்கள் கட்சி"த் தலைவர் இராமதாசின் இடிமுழக்கம் மாற்றனை அதிரவைக்கிறது. "விடுதலைச் சிறுத்தைகள்" தலைவர் திருமாவளவனின் தீந்தமிழ் முழக்கம் தமிழகத்தினைத் திரண்டெழச் செய்கிறது.

தமிழகத்தின் காங்கிரஸ் தலைவர்கள் கூட ஈழத்தமிழ் மக்கள் கண்ணீர் விட்டுக் கலங்குவதை நாம் பார்த்துக் கொண்டு இருக்கமாட்டோம் என்று பகரத் தொடங்கியுள்ளனர். கொடுமை கண்டு சீறி எழும் சீக்கிய இனத்தைச் சார்ந்த மன்மோகன்சிங் இந்தியாவின் தலைமை அமைச்சராக இருப்பது ஈழத்தமிழ் மக்களின் துன்பத்தைத் துடைப்பதற்குத் துணை நிற்பார் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

ஈழத்தமிழருக்கு இனிமேல் இன்னல் நேரிட முடியாது என்று சொல்லும் அளவிற்கு இந்தியத் துணைக்கண்டத்தின் பிரிக்க முடியாத அங்கமாக விளங்கும் தமிழகத்தின் 6 கோடி மக்களின் குரலுக்கு டெல்லி செவிசாய்க்கத் தொடங்கியுள்ளது. இதன் அறிகுறியாக இலங்கை இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் செயலற்றுச் செத்துப் போய்விட்டது. எனவே, பாரதத் தாயின் பாச உணர்வில்- அரவணைப்பில் தமிழீழம் மலர்வதை உலகின் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

ஈழத்தமிழர் விடயத்தில் தமிழகம் தொடர்ந்தும் பார்வையாளராக இராது என்று கலைஞரின் அறிவிப்பு உலகத் தமிழருக்கு உவகைப் பெருக்கினைத் தருகிறது.

"ஈழத்தமிழ் மக்கள் விடயத்திலும் மலையகத் தமிழ் மக்கள் விடயத்திலும் தமிழகம் தொடர்ந்தும் பார்வையாளராக இருக்கமாட்டாது. மாறாக ஆயிரக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது குறித்து இந்திய அரசின் ஊடாக இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கப் போவதாக" கலைஞர் கூறியுள்ள கருத்து காப்பார் யார் உளரோ எனக் கலங்கி நிற்கும் எமக்கும் கண்ணீர் துடைக்கும் நிகழ்ச்சியாக அமைகிறது.

இச்செய்தியை மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் அவர்களுக்கு கலைஞர் கூறியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். பல நெருக்கடிகளுக்கு இடையில் மலையக மக்களை எம்முடன் இணைத்து பிணைத்து தமிழகத்திற்கு ஒரு பாலமாக விளங்க பாங்குடன் சந்திரசேகரன் அவர்கள் ஆற்றும் பணி சால்புடைத்து.

அண்மையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானும் ஈழத்தமிழ் மக்களுடன் இணைத்து வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்துள்ளது. ஆறுமுகமான பொருளாக விளங்குபவன் முருகன். அந்தப் பெயரைத் தாங்கியுள்ள ஆறுமுகம் தொண்டமான் அவர்கள் எம்முடன் இணைந்திருப்பது சிங்களவரைக் கதிகலங்கச் செய்துள்ளது. மலையக மக்களின் சக்தியின் வடிவம் ஆறுமுகம் தொண்டமான். எனவே அவர் எம்முடன் இணைந்ததையிட்டுச் சிங்களத் தலைமைப்பீடமும் - சிங்கள முதலாளிகள் நடத்துகின்ற ஆங்கில ஊடகங்களும் நயவஞ்சக அறிவுரைகளை அவருக்கு வழங்கத் தொடங்கியுள்ளன. இதுவே, மலையக மக்கள் ஈழத்தமிழ் மக்களுடன் இணைந்து விட்டால் சிங்களவர் தலை தூக்குவது கடினம் என சிங்களக் கடும்போக்காளர்கள் கருதுவதை எடுத்துக்காட்டுகின்றது.

கொழும்பில் பல ஆர்ப்பாட்டங்கள் செய்து மக்களின் கொந்தளிப்பை உலகுக்குக் காட்டி வரும் மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் அவர்களுக்கும் நாம் நன்றி நவில்கின்றோம். சுருங்கக் கூறின் தமிழ் கூறும் நல்லுலகம் மட்டுமல்ல இந்தியத் துணைக் கண்டமும் எம் அவலத்தைக் கண்டு அபயக் குரல் கொடுக்க முன்வந்துள்ளது. இதுவரை யில் நாம் பட்ட துன்பங்கள், இன்னல்கள், உயிரிழப்புகள், உடைமையிழப்புகள் ஒன்றும் வீண் போகவில்லை என்பதை உணர்த்தி நிற்கின்றது. காலம் கடந்த நிலையிலாவது ஞாலம் எமக்கு துணை நிற்பது எம் சொந்த - வெந்த உள்ளங்களுக்கு ஆறுதல் அளிக்கிறது.

**மா.க.ஈழவேந்தன்**
நாடாளுமன்ற உறுப்பினர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத் தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் எழுதிய "சிவ ஜோதி" நூலின் அறிமுகவிழா அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் நூலாசிரியரிடமிருந்து நூலின் முதற் பிரதியை தொழிலதிபர் எஸ்.கனகையா பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.





**New Batches Start on**

Batch 3 [Weekday] : 11.01.2006
Batch 4 [Weekend] : 14.01.2006 } at 10.00 A.M.

| பயிற்சி நெறிகள் | | வழமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| Diploma in MS Office | | ~~4800/=~~ | 2000/= |
| Diploma in Desk Top Publishing | | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Internet Technology | | ~~6000/=~~ | 3000/= |
| Diploma in Hardware Technology | | ~~7000/=~~ | 3000/= |
| Diploma in Computer Programming | | ~~10000/=~~ | 6000/= |
| PageMaker | CorelDRAW | ~~1500/=~~ | 1000/= |
| Flash | Photoshop | | |

சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
"A Centre of Excellence in Global Information Technology"
# 100, Clock Tower Road, Jaffna
T.P No. : 021 222 2831 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk



**வைத்தியம்**

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், விரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்குணப்படுத்துபவர்:

**வேலணை வைத்திய கலாநிதி,**
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459.


## தரம் 6 அனுமதி மாணவர் விவரம் அனுப்பிவைப்பு

அச்சுவேலி,ஜன.10

5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை தேசியப் பாடசாலைகளில் அனுமதிப்பது தொடர்பான பெயர்ப் பட்டியலை கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

பெயர்ப் பட்டியலில் இடம்பெற்றுள்ள மாணவர்களைச் சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் அனுமதிப்பது தொடர்பான ஏற்பாடுகளை கல்லூரிகளின் அதிபர்கள் மேற்கொண்டுள்ளனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர் தமக்கு விருப்பமான பாடசாலைகளைக் குறிப்பிட்டு ஏற்கனவே கல்வி அமைச்சுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

அந்த விண்ணப்பங்களின் அடிப் படையில் மாணவர்கள் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் வகைப் பாட்டிற்கு ஏற்ப கல்வி அமைச்சு பட்டியலை அனுப்பி வைத்துள்ளதாகக் கூறப்பட்டது.

(எ-11)

**31 ஆம் நாள் நினைவலைகளும்**
வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 20 | | 12 |
| 05 | | 12 |
| 1937 | | 2005 |



**அமரர் முருகன் செல்லத்தம்பி**
(ஓய்வு பெற்ற அதிபர்)

கடந்த 12.12.2005 அன்று மரணமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (11.01.2006) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

"வளர்மதி"
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(45109) (39-11-34)

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 23 | | 28 |
| 07 | | 11 |
| 1935 | | 2004 |



**அமரர் அருணாசலம் மகேஸ்வரி**
திதி: 10.01.2006

*எம் அன்பு அம்மா- நாம்*
*என்றும் உன் அழியாத நினைவோடு*
*ஓராண்டு சென்று விட்டதே*
*பாசத்தோடும் நேசத்தோடும் வளர்த்த- அம்மா*
*உன் திருமுகம் மறையவில்லையே!*
*என்றும் உன் நினைவோடு நாம் வாழ்ந்திடுவோம்*

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சிராவில் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
**"விநாயகப் பிரஸ்தம்"**
ஒட்டுவெளி, மிருசுவில்,
**திரு.அ.அகிலதாஸ்,**
இல.17, ஆடியபாத வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**குடும்பத்தினர்.**
(45151) (39-11-34)

**சேவை நலன் பாராட்டு**



செல்வி
**இராஜேஸ்வரி பேரம்பலம்**
B.A.Dip in Ed, Sc.Ted,
SLTS-I



திருமதி
**சித்திராதேவி திருநாவுக்கரசு**
B.A.Dip in Ed,.
S.L.T.S-I

எமது கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து ஓய்வு பெற்று 10.01.2006 இல் "பணிநயப்பு விழா" காணும் எமது ஆசிரியர்கள் இருவரையும் பாராட்டி பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

யா/வ[illegible]
க[illegible].

(45088) (39-11-34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை குத்தகைக்குப் பெறுமாறு இந்தியப் பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்

## மீனவர் மீதான தாக்குதலின் எதிரொலி

கடற்படையினர் அப்பாவித் தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்துவதைத் தடுக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

கச்சதீவை குத்தகை அடிப்படையில் எடுப்பதன் மூலம் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்று முதல்வர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த தமிழக மீனவர் ஆண்ட்ரூஸ் இலங்கை இராணுவத்தினரால் தாக்கப்பட்டு குண்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதில் 3 மீனவர்கள் உயிர்தப்பியுள்ளனர். ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணி அளவில் இச்சம்பவம் நடந்துள்ளது. இதைத் தொடர்ந்து கச்சதீவு கடற்பகுதியில் அடிக்கடி நிகழும் இதுபோன்ற தாக்குதல் சம்பவங்களால் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி முதல்வர் ஜெயலலிதா பிரதமர் மன்மோகன்சிங்குக்கு ஞாயிற்றுக்கிழமை கடிதம் எழுதியுள்ளார்.

கடித விவரம் வருமாறு:-

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர். பாக்குநீரிணை அருகே உள்ள பகுதியான கச்சதீவில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் இதுபோன்ற தாக்குதலுக்கு அடிக்கடி ஆளாகின்றனர். இதுபோன்ற சம்பவம் ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்துள்ளது. இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள் சனிக்கிழமை இரவு இயந்திரப்படகு மூலம் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அப்பகுதிக்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு அவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். இத்தாக்குதல் சம்பவம் அதிகாலை 3 மணி அளவில் நிகழ்ந்துள்ளது. இதில் ஆண்ட்ரூஸ் என்ற மீனவர் மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்துள்ளது. அவர் தற்போது இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவருடன் மீன்பிடித்துக்கொண்டிருந்த மற்ற மூவரும் உயிர்தப்பியுள்ளனர். தொடர்ந்து இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. இதைத் தடுக்கவேண்டும் என்று பிரதமராகிய உங்களுக்கு பலமுறை கடிதம் எழுதியுள்ளேன். தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் மீன்பிடித் தொழிலையே சார்ந்துள்ளது. இப்பகுதி மீனவர்கள் பெரும்பாலும் கச்சதீவுப் பகுதியைச் சுற்றியுள்ள இடங்களிலேயே மீன் பிடித்து வருகின்றனர். கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமையை மத்திய அரசு நிலை நாட்டவேண்டும். அதன் மூலம்தான் இப்பகுதியில் மீனவர்கள் அச்சமின்றி மீன்பிடிக்க இயலும். பாக்குநீரிணை பகுதியில் மீனவர்களுக்கு எதிராக இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று பலமுறை மத்திய அரசை வலியுறுத்தியுள்ளேன்.



அப்பாவி மீனவர்களுக்கு எதிராக இராணுவத் தாக்குதல் நடத்துவதை எவருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இந்த விடயத்தில் இந்திய அரசின் கடும் கண்டனத்தை இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## ராஜஸ்தானில் இருந்து ஒட்டகங்கள் சென்னைக்கு

### பக்ரீத் பண்டிகை அன்று பலியிடுவதற்காக

ராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பாலைவனப் பகுதிகளில் இருந்து ஆந்திராவில் உள்ள சந்தைக்கு ஒட்டகங்கள் இரண்டு மாதங்கள் நடத்தியே அழைத்து வருகின்றனர்.அங்குள்ள சந்தையில் ஒரு ஒட்டகம் அதிகபட்சம் 20 ஆயிரம் வரை ஏலம் விடப்படுகிறது.ஏலத்தில் எடுக்கப்படும் ஒட்டகங்கள் லொறிகளில் ஏற்றி வரப்படுகிறது.முஸ்லிம்களின் பக்ரீத் பண்டிகையின்போது அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்காக கூட்டுக் குர்பானிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.சென்னையில் பள்ளிவாசலில் கூட்டு குர்பானிக்காக 14 இடங்களில் ஒட்டகங்கள் பலியிடப்படகின்றன.இந்த நிலையில் த.மு.மு.க. சார்பில் ஆந்திராவில் உள்ள கடப்பாவில் இருந்து ஐந்து ஒட்டகங்கள் லொறிகளில் ஏற்றி சென்னைக்கு கொண்டுவரப்பட்டன.இரண்டு வெள்ளை நிறத்திலும் இரண்டு மண் நிறத்திலும் உள்ளன.ஐந்தரை வயதுள்ள ஒட்டகங்கள் 21 அடிக்கு குறையாமல் உள்ளது.இங்கு ஒட்டகங்கள் வந்து இறங்கியதை அறிந்த ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாக வந்து பார்த்துச் சென்றனர்.கூட்டு குர்பானிக்காக ஒட்டகங்கள் வருவது சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. இது குறித்து அப்துல் ஹமீது, தாகா ஆகியோர் கூறுகையில் , பக்ரீத்தன்று ஆடுகள், மாடுகள் பலியிடுவோம். கூட்டு குர்பானிக்காக ராஜஸ்தானில் இருந்து ஆந்திரா சந்தைக்கு வந்து அங்கிருந்து ஐந்து ஒட்டகங்கள் வாங்கி சென்னைக்கு கொண்டு வந்துள்ளோம் தற்போது ஒட்டகங்களுக்கு உணவாக வேப்பிலையை கொடுக்கிறோம். ஒவ்வொரு ஒட்டகமும் 25 ஆயிரம் ரூபாய். 35 பேர் கூட்டாக சேர்ந்து ஒட்டகங்களை வாங்கியுள்ளோம். பக்ரீத்தன்று ஐந்து ஒட்டகங்களின் கறி எல்லாத்தரப்பினருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்-என்றனர். (ஐ)



பலியிடுவதற்காக கொண்டுவரப்பட்ட ஒட்டகங்கள்.....

## 20ஆண்டுகளில் ஒரு கோடி பெண் சிசுக்களை இழந்தது இந்தியா! ஆய்வில் திடுக்கிடும் தகவல்!!

புதுடில்லி, ஜன.10

கடந்த 20 ஆண்டுகளில் கருச்சிதைவுகளினாலும் ஆண் மகவு தேர்வுகளினாலும் இந்தியாவில் ஒரு கோடி பெண் குழந்தைப் பிறப்புகள் இழக்கப்பட்டிருக்கின்றன. இந்த திடுக்கிடும் தகவல் ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பிரசவத்துக்கு முன்பே குழந்தைகளை தெரிவுசெய்வதாலும், தெரிவுசெய்து கருச்சிதைவுகளை மேற்கொள்வதாலும் இந்தியாவில் 5 லட்சம் பெண் குழந்தைகள் வருடம் தோறும் இழக்கப்படுகிறார்கள் என்று இந்தியாவிலும் கனடாவிலும் நடத்தப்பட்டுள்ள ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. 'லான்செட்' என்ற சஞ்சிகையின் சார்பில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தேசிய மட்டத்தில் 10 லட்சத்து 10 ஆயிரம் வாசஸ்தலங்களில் 1998ஆம் ஆண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

பெண்கள் பற்றாக்குறை படித்த பெண்கள் மத்தியிலேயே அதிகமாகக் காணப்படுவதாகவும், சமய மட்டத்தில் எதுவித மாறுபாடும் காணப்படவில்லை என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான நாடுகளில் ஆண்களின் எண்ணிக்கையை பெண்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தாலும் 2001ஆம் ஆண்டு இந்தியாவில் நடத்தப்பட்ட ஆய்வின்படி பிறக்கின்ற 1000 ஆண் பிள்ளைகளுக்கு 933 பெண் பிள்ளைகள் உள்ளன என்று தெரியவந்தது.

கனடாவில் ரொரன்ரோ பல்கலைக் கழகத்தின் சென் மைக்கல் மருத்துவமனையைச் சேர்ந்த பிரமாத்ஜா மற்றும் இந்தியாவில் சண்டிகார் மருத்துவ ஆராய்ச்சி பட்டப் பின்படிப்பு கழகத்தின் ராஜேஸ்குமார் ஆகியோர்களால் இந்த மிகப் பிந்திய ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

குடும்பங்களில் மூத்த குழந்தைகள் பெண்களாய் இருக்கும்போது ஆண்களைத் தெரிவு செய்யும் போக்கு அதிகமாகக் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்தார்கள்.

இந்தியாவில் பெண்குழந்தைகளை கருவிலேயே சிதைத்து விடுவதற்கு சமூக-பொருளாதார விடயங்களே காரணமாக இருக்கின்றன. பெண் குழந்தைகள் அந்தஸ்தில் குறைந்தவர்களாகவும் குடும்பத்துக்கு பாரமானவர்களாகவுமே கருதப்பட்டு வந்துள்ளனர் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

(ப)

## மியான்மாரின் தலைநகரை மாற்றத் திட்டம்

யங்கூன்,ஜன.10

மியான்மாரின் தலைநகரை மாற்றும் பணியில் அந்நாட்டு இராணுவ அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

மியான்மார் தலைநகரான யங்கூன் உள்ளது. இந்நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தலைநகர் மாற்றம் பற்றிய அறிவிப்பை இராணுவ அரசு அறிவித்தது. யங்கூன் நகரிலிருந்து வடக்கே 320 கி.மீ தொலைவில் உள்ள ஜின்மாருக்கு மாற்றத் திட்டமிட்டது.

தலைநகரை மாற்றும் வேலைகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதற்கிடையே, தெற்காசிய நாடுகளில் உச்சி மாநாடு மியான்மாரில் இம்மாதம் நடைபெற வேண்டும். தலைநகர் மாற்றத்தினால் உச்சி மாநாடு தள்ளிப்போகும் எனத் தெரிகிறது.

(ஐ)

## 'டோறா' தாக்குதல் சம்பவத்தின் பின் இராமேஸ்வரத்தில் தீவிர பாதுகாப்பு

இராமேஸ்வரம்,ஜன.10

திருகோணமலையில் இலங்கைக் கடற்படைப் படகு தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து இராமேஸ்வரம் பகுதியில் பாகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக 'தினமலர்' பத்திரிகை வெளியிட்டிருக்கும் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அதிபராக ராஜபக்ஷ பதவி ஏற்ற பிறகு இராணுவத்தினரின் தாக்குதல் அதிகரித்து வருகிறது.இதனால் இலங்கையில் பதட்டமான சூழ்நிலை நீடித்து வருகிறது.கடந்த திங்கட்கிழமை திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்கள் இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டனர்.இதில் இலங்கைப் போர் கப்பல் மூழ்கடிக்கப்பட்டு கடற்படை வீரர்கள் 15பேர் பலியானார்கள்.அதனைத் தொடர்ந்து இலங்கையில் எந்த நேரத்திலும் மீண்டும் போர் மூளும் என்ற அபாயம் ஏற்பட்டுள்ளது.எனவே, அங்குள்ள தமிழர்கள் குடும்பம் குடும்பமாக பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுகின்றார்கள்.அதோடு, ஒரு பகுதியினர் கள்ளத்தனமாக படகுகளில் ஏறி தமிழகப் பகுதிக்கு வர முயற்சிக்கின்றனர். ஆனாலும், இதனைக் கண்காணிக்கும் இலங்கை கடற்படையினர் தமிழர்களைத் தடுத்தி நிறுத்தி வருவதால் அவர்கள் எங்கு செல்வது என தவியாய் தவித்து உள்ளனர்.என்றாலும் இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து வெளியேறி வருவதால் இராமேஸ்வர்ம் பகுதியில் இந்தியக் கடற்படை உஷார் படுத்தப்பட்டுள்ளது.இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சி மடம், மண்டபம் ஆகிய கடலோரப் பகுதிகளில்கடலோரக் காவல் படையினரும் உள்ளூர் பொலீஸ் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.அவர்கள் விடிய விடிய தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.அதோடு, சந்தேகப்படும் நபர்களைப் பிடித்து தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். மேலும் கடற்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டர்களும் தாழ்வாக பறந்து வந்து தீவிர காண்காணிப்பில் ஈடுபட்டு உள்ளன. மேலும் இராமேஸ்வரம் பகுதிக்கு வெளிப்பகுதி மக்கள் யாராவது வருகிறார்களா என்பது குறித்தும் கடற்படையினர் உஷார் நிலையில் கண்காணித்து வருகின்றனர்.இதனிடையே இராமநாதபுரம் பொலீஸ் அதிகாரி ராஜேந்திரன் உத்தரவின் பேரில் இராமேஸ்வரம் டி.எஸ்.பி. பூாலசுப்பிரமணியம் தலைமையில் மீனவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அப்போது பொலீஸார் மீனவர்களிடம் யாராவது சந்தேகப்படும்படி நபர்கள் தங்கி இருந்தாலோ அல்லது வந்தாலோ உடனடியாக பொலீஸாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினர். (ஐ)

## தீர்ப்பினால் ஆத்திரமுற்ற விவசாயி நீதிமன்றில் தற்கொலைத் தாக்குதல்

பெய்ஜிங், ஜன.10

தீர்ப்பினால் ஆத்திரமடைந்த விவசாயி உடலில் மறைத்து எடுத்து வந்த குண்டை நீதிமன்றத்தில் வெடிக்கச் செய்ததில் அவரும் நீதிபதி உட்பட வேறு 4 பேரும் பலியானார்கள்.

சீனாவில் வடமேற்கு கான்சு மாகாணத்தில் மின்லே என்ற இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

இறந்துபோன மகனுடைய சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் சீன விவசாயி கியான் வென்ஜாவோவுக்கு (வயது-62) எதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த விவசாயி கியான் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்துக்கு வந்தார்.அப்போது நீதிமன்றக் கட்டடத்தின் 4 ஆவது மாடியில் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

விறுவிறுவென அங்கு சென்ற விவசாயி கியான் யாரும் எதிர்பாராத வகையில் உடலில் மறைத்து எடுத்து வந்திருந்த வெடி குண்டை வெடிக்கச் செய்தார்.

அவர் ஆங்காங்கே உடல் சிதறி இறந்தார். அங்கிருந்த நீதிபதி சென் விங்ராங், சீன கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி வாங் கியாங் உட்பட வேறு 4 பேரும் பலியானார்கள்.

பொறாமை, முன்விரோதம், தொழில் போட்டி போன்ற காரணங்களால் வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடைபெறுவது சீனாவில் சர்வசாதாரணமாகிவிட்டது .

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவங்களில் இருந்து விடுபட உதவும் மார்கழிமாத வைகுண்ட ஏகாதசி விரதம்

**இன்று வைகுண்ட ஏகாதசி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

உலக மாந்தரை நல்வழிப்படுத்துவதற்குத்தான் ஆன்றோர்களால் ஆலய வழிபாடுகளும் விழாக்களும் பண்டிகைகளும் விரதங்களும் ஏற்படுத்தப்பட்டன. விரதங்கள் இந்துக்களுடன் பல்வேறு வகையாகப் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

மாதவிரதம், வாரவிரதம், திதிவிரதம், நட்சத்திரவிரதம் எனப் பலவகையான விரதங்களை மக்கள் தவறாமல் அனுஷ்டித்து வருகின்றனர். இவற்றில், அதிவிசேடமானதும் உத்தமமானதும் ஏகாதசி விரதம் ஆகும். மாதந்தோறும் சுக்கிலபக்ஷம், கிருஷ்ண பக்ஷம் என்னும் இருவகையாக மாதந்தோறும் இரு ஏகாதசிகள் என்று வருடத்தில் இருபத்தி நான்கு ஏகாதசிகள் வருகின்றன.

அவற்றிலே முதன்மையானது வைகுண்ட ஏகாதசியாகும். ஏகாதசி விரதத்தை அனுட்டித்து வருவோர் வைகுந்தபதம் என்னும் மோட்சத்தை - சுவர்க்கத்தை அடைவது மார்கழியில் வரும் வைகுண்ட ஏகாதசி விரதத்தை அனுஷ்டிப்பதன் - மூலமாகத்தான் என்றால் மிகையாகாது.

வருடந்தோறும் மார்கழி மாதத்தில் சுக்கில பட்சத்தில் வரும் இந்த வைகுண்ட ஏகாதசியை ஆரம்ப ஏகாதசியென்றும் சுவர்க்க வாசல் ஏகாதசியென்றும் மோட்ஷ ஏகாதசியென்றும் அழைப்பர்.

மாதந்தோறும் வரும் ஏகாதசி விரதத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் மார்கழி மாதத்தில் வரும் இந்த வைகுண்ட ஏகாதசி விரதத்தை நோற்பதன் மூலம் சகல பாவங்களினின்றும் விடுபடமுடியும் என்று சமய நூல்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

பூரணை தினத்திற்கு முன்னர் வருவது பூர்வபட்ஷம் என்னும் சுக்கில படஷம் ஆகும். அமாவாசைக்கு முன்னர் வருவது கிருஷ்ண பட்ஷம் என்னும் அபரபட்ஷம் ஆகும். துறவிகளும் சந்நியாசிகளும் எதுவித குறிக்கோளுமின்றி இறைவனை அடைவதையே தமது நோக்கமாகக் கொண்டு அனுஷ்டிக்கப்படுவது அபரபட்ஷத்து ஏகாதசி விரதங்களாகும். சாதாரண மாந்தர் நமது நோக்கங்களை நிறைவேற்ற வேண்டி அனுட்டிப்பது பூர்வ பட்ஷத்தில் வரும் ஏகாதசி விரதங்களாகும்.

ஏகாதசி விரதமிருப்போர் தசமி கலவாத ஏகாதசியை அனுஷ்டித்து துவாதசி அதிகாலையில் பாரணம் செய்தல் வேண்டும். ஏகாதசி விரதம் மகாவிஷ்ணுவுக்குரியது. துவாதசி மகா இலக்குமிக்குரியது. இந்த விரத தினத்திலன்று துவாதசி நாள் முழுக்கப் பரவினாலும் பரவாயில்லை. ஏகாதசியானது அன்று ஒரு நாழிகையின் ஒரு சிறிய பங்கு காலையில் இருந்தால் அதனையே விரததினமாக ஏற்றுக்கொண்டு மறுநாள் அதிகாலை துவாதசி அற்றுப் போகும் முன்னர் பாரணம் செய்தல் வேண்டும்.



'வைஷ்ணவர்கள் தசமி கலந்த ஏகாதசியுடன் துவாதசியையும் விரதமாக ஏற்று திரயோதசியில் பாரணம் செய்கிறார்கள்.

விதர்ப்ப தேசத்தை யாண்டருக்குமாங்கத மன்னவன் தனதுமக்களுடனும் பரிவாரங்களுடனும் சொர்க்கத்தையடைந்தது மார்கழி துவாதசியிலன்று அதிகாலையில்தான்.

தனது தேவியர்பூச்சூடஅமைத்திருந்த மலர்ச்சோலையில் தேவகன்னிகள் பூக்கள் பறித்துச் செல்வதால் குறைவுகண்டதேவியர் மன்னவனிடம் முறையிட மன்னவனும் காவலாளிகளை விசாரித்து அவர்கள் கூறியபடி மலர்ச்சோலையில் தவமிருந்து பூசைகள் செய்யும் சாதுவிடம் வணங்கி அதுபற்றி வினாவி சாதுவின் ஆலோசனைப்படி கொம்மட்டிச் செடிகள் சோலையில் நாட்டினான்.

கொம்மட்டிச் செடி காலில் பட்டதால் தோசமடைந்த தேவ கன்னிகைகளில் ஒருத்தி மானிடர்கள் கண்களுக்குத் தோன்ற சேதி தெரிந்த மன்னவனும் தேவகன்னிகையைச் சேவித்துப் பணிந்து பூக்கள் பறிக்கும் காரணம் வினவினான்.

மன்னவா! தேவர்களுக்கு பூசை செய்வதற்குத்தான் இந்தப் பூக்களைப் பறித்துச் செல்கிறோம். இன்று இந்தக் கொம் மட்டிச் செடிபட்ட தோசத்தினால் மானிடர்களுக்குத் தோன்றுகிறேன். இந்தத் தோசம் நீங்க ஏகாதசி விரத பலனை எவராவது தத்தம் செய்து தாரை வார்த்துத் தந்தால் நான் தூய்மையாகி மீண்டும் தேவலோகம் செல்வேன்'' என்றாள்.

மன்னவனும் அகமகிழ்ந்து ''ஏகாதசி விரதம் என்றால் என்ன? தெரியாத ஒன்றை நாம் எப்படி உங்களுக்குத் தர முடியும்? என்று கூறினான்.

''மன்னா! உங்கள் அரண்மனை உணவு சமைக்கும் சேடியைப் பெண் இவ்விரதம் அனுஷ்டித்தாள். அவளின் விரத பலனை எனக்குத் தாரை வார்த்துத் தாருங்கள்'' என்று தேவகன்னி கூறினாள்.

ருக்குமாங்கதமன்னவனும் தனது பட்டத்து ராணி சந்தியாவளியைஅழைத்து அவர் மூலம் சேடியப் பெண் யாரென்று அறிந்து, அப் பெண்ணை அழைத்து ஏகாதசி விரத பலனை தேவ கன்னிகைக்கு தானம் செய்யும்படி சேடியப் பெண்ணிடம் கூற, சேடியப் பெண்ணும் விரதம் என்றாலே என்னவென்று அறியாளே. மன்னவன் கூற்றுப்படி நீரை வார்த்து மனப்பூர்வமாக தனது விரத பலனை தாரை வார்த்து கன்னிகைக்குக் கொடுத்தாள்.

பலனை ஏற்ற கணமே மானிடர்களால் மறைந்த தேவகன்னியும் ''மன்னவா! அளப்பரிய அறச்சேவை செய்த உனக்கு, எனது பிரதியுபகாரமாக ஏகாதசி விரதத்தையும் அதனை அனுஷ்டிக்கும் முறைகளையும், உனக்குக் கூறுகின்றேன். அதன்படி நீயும் உன் மனைவிமார்கள், பிள்ளைகள், பரிவாரங்கள் மற்றும் உன் நாட்டினர் முறைப்படிஏகாதசி விரதம் அனுஷ்டித்து இகரபர சுகங்களை இம்மையில் அனுபவித்து இஷ்டசித்திகளைப் பெற்று மறுமையில் மோட்க்ஷத்தை அனுபவியுங்கள்'' என்று கூறி வானுலகேகினாள்.

அன்று முதலே ஏகாதசி விரதம் பூலோக மாந்தரால் ஏற்று அனுஷ்டிக்கப்படலாயிற்று.

மார்கழியானது கீதோபதேசம் செய்த மாதவனின் மாதம் ஆகும். மாதங்களில் சிறப்பு வாய்ந்தது மார்கழியாகும். மார்கழியில் சிவனுக்குரிய திருவாதிரையும் மிகச் சிறப்பு வாய்ந்ததொன்றாகும். எனவே, இந்துப் பெருமக்கள் அனைவரும் பாவத்தை வேரறுக்கும் ஏகாதசி விரதத்தை நோற்று இம்மையில் புண்ணியம் தேடி மறுமையில் பரமபதத்தையடைந்து இன்பத்தை அனுபவியுங்கள்.

**பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக் குரு**
பிரதம குரு, ஸ்ரீவல்லிபுரக்கோயில், புலோலி

## சிறப்புற நடைபெற்ற விருது வழங்கும் விழா

வலி.வடக்கு,ஜன.10

கலைப்பேரரசு எ.ரி.பொன்னுத்துரையின் ஞாபகார்த்த விருது வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத் தலைவர் கலாநிதி க.குணராஜா தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் அருட் தந்தை நேசகுமார் அடிகளாரும் நிகழ்த்தினர்.

வாழ்த்துரையினை யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் நிலைய இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் ஆறு.திருமுருகன் ஆகியோர் வழங்கினர்.

கலைப்பேரரசு எ.ரி.பொன்னுத்துரையின் 2005 ஆம் ஆண்டுக்கான விருதினை நவாலியூர் செல்லத்துரைக்கு கலாநிதி க.குணராசா வழங்கினார். பொன்னாடையை முன்னாள் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அணிவித்தார்.

பணப்பரிசினை அமரர் ஏ.ரி.பொன்னுத்துரையின் மருமகன் பொறியியலாளர் க.தயாபரன் வழங்கிக் கௌரவித்தார். (எ-86)

## புதிய பாடத்திட்ட செயலமர்வு

அச்சுவேலி,ஜன.10

தரம் 8ஆம் வகுப்பில் குடியியல், புவியியல், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 'புதிய பாடத்திட்ட அறிமுகச் செயலமர்வு' யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இரு தினங்கள் நடைபெறவுள்ளது.

நாளை புதன்கிழமையும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெறும் செயலமர்வில் யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம் 8ஆம் வகுப்பில் கல்வி கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.கல்வி வலய கல்விப்பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஐ-11)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 11 - 1950



மறைவு 13 - 01 - 2003

அமரர் **மார்க்கண்டு ஆனந்தராஜா**

திதி: 10.01.2006

ஆலவிருட்சமாய்
எம்மைத் தாங்கினீர்
ஆறாத் துயரில்
ஆழ்த்தி விட்டுச் சென்று விட்டீர்.

இராஜவீதி,
தோப்பு, அச்சுவேலி. (45297)(32-16-19)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**குடும்பத்தினர்.**



## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் தம்பிராசா

*(முன்னாள் வர்த்தகர், நீர்கொழும்பு)*



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம், தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தம்பிராசா அவர்கள் 07.01.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இராசதுரை - தவமலர் தம்பதியரின் மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும் தயாபரன் (ஜேர்மனி), சசிகலா (இத்தாலி), சங்கீதா (கனடா), சுயாந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரலிங்கம் (சாந்தி புடைவையகம்), தங்கச்சியம்மா, கணேசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நளாயினி (ஜேர்மனி), சிவகுமார் (இத்தாலி), இராஜேஸ்வரன் (கனடா), செல்வரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஞானசக்தி, வித்தியானந்தன், நவகுமார், கிருபாசக்தி, வீரமோகன், சிவசக்தி, ஜெயசக்தி, விஜயசக்தி ஆகியோரின் மைத்துனரும் தவநவன், அபிலாஷ், அபிஷா, அபிரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2006)புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (45196)(32-19-16)

தகவல்: **நா.சுந்தரலிங்கம்** *(சகோதரன்- சாந்தி புடைவையகம்).*



## ஏல விற்பனை

*எமது சமாசத்திற்குச் சொந்தமான பி.எம்.சி.மொறிஸ் 26 ஸ்ரீ 5387 இலக்கம் கொண்ட லொறி பகிரங்க ஏலவிற்பனை மூலம் எதிர்வரும் 18.01.2006 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது சமாசத் தலைமை அலுவலகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் சமாச வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை பார்வையிடலாம்.*

*மேற்படி விவரங்களை அறிய தொடர்பு கொள்ளவும்.*

பொதுமுகாமையாளர்,
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்.
தொலைபேசி : 021 2225072

(அ-47289)(18-32-16-19)



*சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி*

## பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

1. சம்பள அளவுத்திட்டம்
5250 - 7750 (கூ.வே.ஆ.சுற்று நிருபம் 31/99 இன் படி)
120X10 - 120X10
குறியீட்டு இலக்கம் 101/8 - 168/81 இன்படி
2. வயது: 25 தொடக்கம் 50 வரை
(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
3. விண்ணப்ப முடிவு திகதி: 20.01.2006
4. பிணைப்பணம் ரொக்கம்: 15000/=
ஆதனம்: 25000/=
5. 1. சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. கணனி அறிவும் திறனும் அவசியமாக இருத்தல் வேண்டும்.
3. மேலதிக விவரங்களைச் சங்க தலைமைக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.
6. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
7. விண்ணப்பங்கள் தலைவர், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கண்டிவீதி, சாவகச்சேரி என்ற முகவரிக்கு பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
8. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 9ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க 10 ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில்ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டப் பதவி ஒன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் க.பொ.த. உயர்தரம் மூன்று (03) பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைமட்டப் பதவி ஒன்றில் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**- தலைவர்.**

*சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,*
*கண்டி வீதி,*
*சாவகச்சேரி.*

(அ-47292)(42-32-16-19)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர் படுகொலையைக் கண்டித்து சர்வதேச அமைப்புகளுக்கு மகஜர்கள்

## முல்லை. வெகுஜன ஒன்றியம் அனுப்பிவைத்தது

பரந்தன்,ஜன.10

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் சர்வதேச அமைப்புகளுக்கு மகஜர்களை அனுப்பிவைத்துள்ளது.

இந்த மகஜர்கள் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியிலுள்ள கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் வைத்து அதன் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டன.

நோர்வேப் பிரதமர், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், ஐரோப்பிய ஒன்றியப் பொதுச் செயலாளர், இலங்கைக்கான பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஜப்பான் தூதுவர்கள், ஐ.நா. பொதுச் செயலாளர், நோர்வேயின் சமாதானச் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோருக்கே இந்த மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மேற்படி அப்பாவி மாணவர்களின் படுகொலைகளைக் கண்டித்து பூநகரி வெகுஜன ஒன்றியம், பூநகரிப் பிரதேச மாணவர் சமூகம் என்பனவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தனித்தனியாக மகஜர்களை அனுப்பிவைத்துள்ளன.

பூநகரிப் பிரதேச வெகுஜன ஒன்றியம் அனுப்பிவைத்துள்ள மகஜரில் -

எங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் மாணவர் படுகொலை தொடர்ந்து கொண்டே உள்ளது. ஸ்ரீலங்கா அரசே இதற்குப் பதில் சொல்லவேண்டும். தாங்களே கொலையின் சூத்திரதாரி என்பதால்தான், அவர்கள் கை கட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாணவர் படுகொலை வரிசையில் கடந்த 02.01.2006 அன்று திருமலையில் எமது பிள்ளைகளான ஐந்து மாணவர்கள் சுட்டும் குண்டுத் தாக்குதல் நடத்தியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவர் படுகாயம் அடைந்தனர்.

இந்தச் செயலைப் பூநகரி வெகுஜன ஒன்றியத்தினராகிய நாம் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு, இக்கொடூரம் இனியும் நிகழாதிருக்கத் தங்களது முழுமையான அழுத்தங்களைப் பயன்படுத்துமாறு வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.

பூநகரிப் பிரதேச மாணவர் சமூகத்தினரின் மகஜரில் -

சர்வதேசமே! நீங்களே நியாயவான்கள். எங்கள் தேசத்தின் தமிழ் உறவுகள்மீது படுகொலைக் கலாசாரம் தொடர்ந்துகொண்டே உள்ளது. அதன் அதி உச்ச நிலையில் இன்றைய மாணவர் சமூகம் குருதியில் மிதக்கிறது.

கடந்த 02.01.2006 அன்று, திருமலையில் ஐந்து மாணவர்கள் ஸ்ரீலங்காப் படைகளால் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்தக் கோர வெறியாட்டத்தைப் பூநகரிப் பிரதேச மாணவர் சமூகமாகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் செயல் மூலம் கொதிப்படைந்துள்ள நாம் உடனடியாக இச்செயலைக் கண்டிக்கும் படியும் இதைச் சர்வதேசத்திற்கு அம்பலப்படுத்தும் படியும் தங்களைப் பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம். இந்நிலை தொடருமானால் அனைத்து மாணவரும் ஆயுதமேந்தி எம்மைப் பாதுகாக்கக் களத்தில் இறங்கவேண்டிவரும் என்பதையும் தங்கள் கவனத்துக்குத் தருகிறோம் - என்று அதில் உள்ளது. (எ-6-352-403)




## மக்களின் தேவைகளை இனங்காண உமையாள்புரத்தில் விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஜன.10

உமையாள்புரம் மக்களின் தேவைகளை இனங்காணுதல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 3 ஆம் திகதி உமையாள்புரம் கலையரசி முன்பள்ளியில் நடைபெற்றது.

வடக்குக் கரையோரப் பாதுகாப்புத் திட்டத்திற்கென கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து உமையாள்புரம் கிராமம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஏற்பாடு செய்யப்பட்ட கிராமத்தின் தேவைப் பகுப்பாய்வு தொடர்பாகக் கலந்துரையாடலில் பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர், உமையாள்புரக் கிராம இணைப்பாளர், கண்டாவளை உதவி அரச அதிபர் அப் பகுதி கிராம சேவையாளர் மற்றும் மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் உட்படப் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் சமூக அபிவிருத்தியை முன்னேற்றும் நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட நிதியுதவியைக்கொண்டு எத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம் என்பதனை ஆராய்வதற்காகவே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-6)

## கிராமிய அபிவிருத்தி வங்கியில் நகை அடகுச்சேவை

ஒட்டுசுட்டான்,ஜன.10

வவுனியா, கனகராயன்குளம் கிராமிய அபிவிருத்தி வங்கியில் அடகுச்சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை இரண்டு மாவீரர்களின் மூத்த சகோதரன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் மணலாறு மாவட்டக் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான வசந்தன் ஏற்றிவைத்தார். நகை அடகுச்சேவையினை வங்கிப் பொதுமுகாமையாளர் தவக்குமார் ஆரம்பித்துவைத்தார். (எ-6-341)

## கமக்கார அமைப்புக்கு புதிய நிர்வாகம் தெரிவு

ஒட்டுசுட்டான்,ஜன.10

ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட கற்சிலைமடு கமக்கார அமைப்புக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கற்சிலைமடு, கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கமக்காரர் அமைப்புத் தலைவர் இ.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

இதில் புதிய ஆண்டுக்குரிய தலைவராக இ.தனபாலசிங்கமும் உப தலைவராக ஆ.குமாரசாமியும் செயலாளராக ச.ஜெதீஸ்வரனும் உப செயலாளராக வே.மோகனதாஸும் பொருளாளராக க.புலேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர். திருமதி தவநாயகி, து.சந்திரன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் திணைகள அதிகாரி எஸ்.அமிர்தலிங்கம் கமக்கார அமைப்புகளின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்தார். (எ-6-341)

# கிளிநொச்சி நெல்வயல்களில் பரவலாகப் பூச்சிநோயின் தாக்கம்

## உடன் கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை என்கின்றனர் விவசாயிகள்

பரந்தன்,ஜன.10

கிளிநொச்சி மாவட்டதில் நெற்பயிர்களில் பூச்சிநோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மை நாள்களாகப் பெய்த தொடர் மழை காரணமாகவும் தொடர்ந்தும் ஏற்பட்டு வரும் காலநிலை மாற்றம் காரணமாகவும் நெற்பயிர்களில் பூச்சித்தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

பெரும்போகத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் குறைந்தளவு நிலப்பரப்பிலேயே நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தப் பயிர்களும் பூச்சித் தாக்கத்தினால் அழிந்துவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கண்டாவளை, ஊரியான், முரசுமோட்டை மற்றும் பன்னங்கண்டி ஆகிய பகுதிகளிலேயே அதிக அளவு பூச்சித் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, நெற்பயிர்களில் கபில நிறத் தண்டு, தத்திப் பூச்சி, மடித்துக்கட்டிப் பூச்சி, சந்துகுந்திப் பூச்சி ஆகியவற்றின் தாக்கமே அதிகமாகக் காணப்படுகின்றது என்றும் -

அவற்றினை இனங்கண்டு இதற்கான இரசாயன மருத்துப் பாவனை அல்லது இயற்கை முறைக் கட்டுப்பாடு குறித்து விவசாயிகளுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் விழிப்புணர்வை வழங்கவேண்டும் என்றும் விவசாயிகள் கோரியுள்ளனர்.

அண்மையில் வட்டக்கச்சிப் பகுதியில் விவசாயி ஒருவர் தமது நெல்வயலில் கதிர் வரும் நிலையில் பூச்சிநாசினிக்குப் பதிலாக சர்வகளை நாசினியான (றவுண்டப்) நாசினியைப் பயன்படுத்தியமையால் அவரது பயிர் முற்றாக அழிந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-6-352)

## கட்டாக்காலிகளால் பெரும் பயிரழிவு

ஒட்டுசுட்டான்,ஜன.10

ஒட்டுசுட்டான், சின்னச்சாளம்பன் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளால் பெரும் பயிரழிவுகள் ஏற்பட்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவ்லை தெரிவித்துள்ளனர். (எ-6-341)

# படகுக் கட்டுமான நிலையத்துக்கு அறிவியல் நகரில் கட்டடம்

## ஜி.ரி.இசற். நிறுவன இணைப்பாளர் அடிக்கல்

கிளிநொச்சி,ஜன.10

கிளிநொச்சி மாவட்டம் அறிவியல் நகரில் படகுக் கட்டுமான நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பொருண்மிய மதியுரையகத்தைச் சேர்ந்த எஸ்.நேசநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரரின் தந்தையும் படகுக் கட்டுமானப் பணியாளருமான நமசிவாயமும் தேசியக் கொடியினை பொருண்மிய மதியுரையகப் பணிப்பாளர் சுந்தரமூர்த்தியும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து படகுக் கட்டுமான நிலையத்துக்கான அடிக்கல்லினை ஜி.ரி.இசீற்றின் வடமாகாண இணைப்பாளர் ஆல்வ்காங் கரற்வா நட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் ஜி.ரி.இசற். நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலர்களும் கடற்றொழில் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த மனோகரன், முரளிதரன் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜி.ரி.இசற். நிறுவன வடமாகாண இணைப்பாளர் ஆல்வ்காங் கரற்வா உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இந்த பகுதியிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்குடன் அவர்களது சுயதொழிலாக இதனை ஏற்படுத்திக் கொடுத்து சமூக, பொருளாதார ரீதியாக நல்லதோர் எதிர்காலத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கம் - என்றார். (எ-6)



புளியங்குளம் - முல்லைத்தீவு வீதியில் உள்ள தண்டுவானில் சேதமடைந்திருந்த பாலம் மீள நிர்மாணிக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.
(படம்: புளியங்குளம் செய்தியாளர்)

## விளையாட்டுக்கழகத்தால் வாய்க்கால்வீதி புனரமைப்பு

ஒட்டுசுட்டான்,ஜன.10

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதிருந்த முத்தையன்கட்டு, வலதுகரை பிரதான வாய்க்கால்வீதி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் மூலம் முழுமையாகச் செப்பனிடப்பட்டுள்ளது.

இந்த வீதி இப்பிரதேச மக்களுக்குரிய முக்கிய போக்குவரத்து வீதியாக இருந்து வருவதால் இதனைப் புனரமைப்புச் செய்வதற்கு அரச அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று. கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும், அதிகாரிகள் எவரும் இதுவிடயத்தில் நடவடிக்கை எடுக்காததை அடுத்து ஐக்கிய விளையாட்டுக் கழகம் இந்த வீதியைப் புனரமைத்துள்ளது. (எ-6-341)

# சுயதொழில் முயற்சிக்கு இலங்கை வங்கி கடனுதவி

புதுக்குடியிருப்பு,ஜன.10

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஐந்து குடும்பங்களுக்கு இலங்கை வங்கி சுயதொழில் முயற்சிக் கடனை வழங்கியுள்ளது.

மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஐந்து குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களில் நான்கு குடும்பங்களுக்குத் தலா 25ஆயிரம் ரூபா வீதமும் ஒரு குடும்பத்திற்கு 15ஆயிரம் ரூபாவும் சுயமுயற்சிக் கடனாக வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இலங்கை வங்கியின் வடமாநில உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், வன்னிப் பிரதேச முகாமையாளர் ச.திருச்செல்வம் ஆகியோர் இந்தக் கடனுக்கான காசோலைகளைக் கையளித்தனர்.

அ.வசந்தராசா, திருமதி மோ.இரத்தினமாலா, இ.கிருபாகரன் மற்றும் த.விஜயானந்தன் ஆகிய நால்வருக்கும் தலா 25ஆயிரம் ரூபா வீதமும் திருமதி குமார் தனவதிக்கு 15 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டது. (எ-6-353)

## கனகராயன்குளத்தில் தையல் பயிற்சிநெறி

ஒட்டுசுட்டான்,ஜன.10

வவுனியா கனகராயன் குளத்தில் மாதர் அபிவிருத்திச் சங்கத்தினால் தையல் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கனகராயன்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கனகராயன்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை கனகராயன்குளப் பிரதேசப் பொறுப்பாளர் இளவரசன் ஏற்றிவைத்தார்.

தலைமையுரையினை மாதர் சங்கத் தலைவி நிகழ்த்தியதைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட நிதிப் பொறுப்பாளர் தமிழ்நேசன், கனகராயன்குளப் பிரதேசப் பொறுப்பாளர் இளவரசன், பிரதேச செயலாளர் எஸ்.பரந்தாமன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந்த நிகழ்வில் கிராம அலுவலர்கள், பயிற்சி பெறும் மாணவர்கள் பயிற்சி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-3-341)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
ஸ்ரீராமஜெயம்



யாழ்.வண்ணை
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

10.01.2006 செவ்வாய்க்கிழமை
**விசேட நிகழ்ச்சிகள்**

*இரவு 8 மணி - 9.30 மணி* மங்கள வாத்தியம் - **தேவஸ்தான குழுவினர்**
சு.மந்திரமூர்த்தி குழுவினர்

*இரவு 9.30 மணி - 11.30 மணி* "வைகுண்ட ஏகாதசி"
[தெய்வீகப் பேருரை]
நிகழ்த்துபவர்
**தமிழருவி த.சிவகுமாரன் B.A.(Hons)**
(தலைவர்
வவுனியா மாவட்டத் தமிழ்ச் சங்கம்)

*இரவு 11.30 மணி - பி.இ.ஒருமணி* **ஹரி பஜனை**
தேவஸ்தான பஜனைக் குழுவினர்

*பின்னிரவு ஒரு மணி - 3மணி* **வில்லுப்பாட்டு**
**"சூடிக் கொடுத்த சுடர்க்கொடி"**
நிகழ்த்துபவர்
கலைஞானச்சுடர், சிவநெறிக் கலாநிதி, மரபுக்கலைச் சுடர்,
கவிமணி, சைவப்புலவர் **இராசையா ஸ்ரீதரன்**
நகைச்சுவை: **பொன் தர்மேந்திரன்**
ஆர்மோனியம் : **சி.இராமசாமி**
மிருதங்கம்: **ஸ்ரீ.நிதர்சன்**
கடம்: **நயினை விஜயன்**

**யாழ்ப்பாணம்.** - **ஆதீன மஹாசபை.**
(சி/47273)(26.11.34.42)



# KAMARAJ UNIVERSITY
# மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகள் தற்போது இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே யாழ் புதிய உயர் கல்வி நிறுவனத்தில் இப் பல்கலைக்கழகத்தின் BA, MA, BSc-Mathematics ஆகிய பட்டப்படிப்புகளை மாணவர்கள் கற்று வருகின்றார்கள்.

யாழ் புதிய உயர் கல்வி நிறுவனத்தின் ஊடாக யுனிவெக் நிறுவனத்தின் யாழ் "கணனித் தகவல் தொழில்நுட்பக் கல்லூரியில்" காமராஜர் பல்கலைக்கழகத்தின் பின்வரும் பட்டப்படிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

**B.C.A (Bachelor of Computer Application) – Three years**
Eligibility: A/L Pass (Arts or Commerce or Maths or Bioscience)

**M.C.A (Master of Computer Application) –Three year**
Eligibility: Any Degree

**M.Phil Computer Science – One Year**
Eligibility: Master Degree in Computer Science

காமராஜர் பல்கலைக்கழகத்தின் சகல பரீட்சைகளும் யாழ்ப்பாணத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்கான பரீட்சை டிசம்பர் மாதம் நடைபெறும்

25-01-2006 ம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக பதிவுகளை மேற்கொள்ளவும்

**UNIVAC**
College of Computer-Information Technology
விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன
213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 6176476


## திருவாசகம் முற்றோதல்

தென்மராட்சி ஜன.10

மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் ஆலயத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 6மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம் பெறும்.

ஆலய பஜனைக் குழுவினர் திருவாசக முற்றோதலை நிகழ்த்துவர். (ஐ-117)


**கண்ணீர் அஞ்சலி**

எமது வித்தியாலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர் திருமதி ஜீவராசா சிறிசாந்தமலர் அவர்களின் பாசமிகு தந்தை

**சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு துயர்அடைவதோடு அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்,
சாவகச்சேரி. (45172)(42-19-45)
*அதிபர், ஆசிரியர்கள்,*
*கல்விசாரா ஊழியர்கள்.*



## 45ஆம் நாள் நினைவஞ்சலி

*தோற்றம்* 14 - 03 - 1970



*மறைவு* 27 - 11 - 2005

**திருமதி வாசினி ஜீவராஜா**

நாள்கள் மூபதினைந்தானாலும் - உன்
உயிர்கள் நெஞ்சம் நினைந்துடிக்குதம்மா!
எம்முயிராய் இருந்தாயே! - இன்றுன்னால்
சக உயிர்கள் ஏங்கித் தவிக்குதம்மா!
காலங்கள் கரைந்தோடினும் - இக்
கவலை இனித்தீராதம்மா!

*ஞானவைரவர் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (45167)(42-19-45)

*கண்ணீர்க்கறைகளுடன்*
**குடும்பத்தினர்.**


## நயினாதீவில் புதிதாகப் பாலர் பாடசாலை

யாழ்ப்பாணம், ஜன.10

நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலையத்தில் பாலர் பாடசாலை ஒன்று அண்மையில் புதிதாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற அதிபர் கு.சாந்தலிங்கம் பாலர் பாடசாலையைத் திறந்து வைத்தார்.

இந்த நிலையத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி உதவியுடன் மின்சார இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது. (எ-14)


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு* 24 - 03 - 1944



*உதிர்வு* 21 - 12 - 1996

**. முத்துச்சாமி மகாலிங்கம்**

திதி : ஏகாதசி 10.01.2006

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கிறோம்*

53, பெரிய தம்பிரான் கோயிலடி,
வண்ணார்பண்ணை. (46178)(11-84-42) - குடும்பத்தினர்.


## குடும்ப அட்டை பெறுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.10

உடுவில் வடக்கு ஜே-186 கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் குடும்பங்களில் நிரந்தர குடும்ப அட்டை இதுவரை பெறாதவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அப்பகுதி கிராம சேவகர் பொ.புவனேஸ்ராசா கேட்டுள்ளார். (ஐ-7)


## லீலா பஞ்சாங்க சித்திரக்கலண்டர்




புதுப் பொலிவுடன்

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர், டயறி வகைகள் புதுப் பொலிவுடன் வெளிவந்து விற்பனையாகின்றன

உலகின் முதன்முதல் வெளிவந்துள்ள ஒரேயொரு தமிழ் சித்திரக் கலண்டர்.

**கைவசம் இன்னும் சொற்ப கலண்டர், டயறிகள் மட்டுமே உள்ளன. தங்களுக்கு தேவைப்படும் கலண்டர், டயறிகளை எம்மிடமோ அல்லது எமது விற்பனையாளர்களிடமோ உடன் பெற்றுக்கொள்ளவும்.**

**லீலா பிறஸ் பிறைவெட் லிமிட்டட்**
182, மெசஞ்சர் வீதி, கொழும்பு 12.
தொலை பேசி : 2325930, 2334332 தொலைநகல் : 2446077


## வெளிவாரிப் பரீட்சை முடிவு இன்று வெளியாகும்

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் கலைமாணி பகுதி I - 2001 பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகின்றன.

இப்பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சார்த்திகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பார்வையிடலாம் எனவும் -

மீள்பரீட்சார்த்திகள் உடன் தமது பரீட்சைக்கான விண்ணப்பங்களைச் செய்ய முடியும் எனவும் -

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் அலகின் உதவிப் பதிவாளர் எஸ்.கே. பிரபாகரன் தெரிவித்துள்ளார். (ஐ-12)


**HIGH SPEED INTERNET BROWSING**
*நல்லைக் கந்தன் நெற் கபே*
OPEN : 9.00 a.m. TO 11.00 p.m.
62, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2779
[சி/47154]



## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

*தாயின் மடியில்* 02 - 04 - 1980



*இறைவன் அரவணைப்பில்* 01 - 12 - 2005

**சின்னையா சிவகரன்**
*(ஆரணி பல்பொருள் வாணிப உரிமையாளர்)*

எமது குடும்பத் தலைவனின் 41ஆம் நாள் நினைவு நாளும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (10.01.2006) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது.

இதில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:*
அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இவ்அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.* (45169)(42-19-45)
- **குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் தொழிற்பயிற்சிக்கூடம்; நீடோ நிறுவன அனுசரணையுடன் திறப்பு

புதுக்குடியிருப்பு,ஜன.10

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினால் நீடோ நிறுவனத்தின் அனுசரணையுடன் தொழிற்பயிற்சிக்கூடம் ஒன்று புதுக்குடியிருப்பில் திறந்துவைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் ஐயனார் கோயில் முன்பாக இந்த நிலையம் அமைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில் இளையோர் செயற்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் எஸ்.நரேன் தலைமையில் இதன் திறப்புவிழா நடைபெற்றது.

பொதுச் சுடரினை மாவீரர் மேஜர் பண்டிதரின் தாயார் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஏற்றிவைத்தார்.

மங்கள விளக்கினை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் பெ.க.சிவலிங்கம், இராமசாமிக்குருக்கள், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நிலையக் கட்டடத்தை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். முல்லை. மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் அடுத்த கட்டடத் தொகுதியை நாடாவெட்டித் திறந்துவைத்தார். முல்லை. மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி சசி சிவன்கோயில் பரிபாலனசபைச் செயலாளர் ஆகியோர் கட்டடத்தொகுதிகளை நாடாவெட்டித் திறந்துவைத்தனர். சிறப்புரையினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் ஆற்றினார். தொடர்ந்து 'நீடோ' நிறுவன இணைப்பாளர்மு.யோகேஸ்வரன் பயிற்சிநெறி சம்பந்தமாக விளக்கவுரையாற்றினார். ஆரம்பநாள் நிகழ்வாக மரங்கள் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. (த-6-353)

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் வருடா வருடம் சிறப்பாக நடைபெறும் சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம் இவ் வருடமும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

முதற்சாம பூசை இரவு 7 மணிக்கும் இரண்டாம் சாம பூசை இரவு 10 மணிக்கும் அர்த்த இராத்திரிப் பூசை 12 மணிக்கும், உதயப்பூசை காலை 4 மணிக்கும் விசேட அபிஷேகத்துடன் நடைபெற்று மாயவன் வீதிவலம் வரவுள்ளார்.

மாயவன் பக்தர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றி மாயவன் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில், துன்னாலை வடக்கு, புலோலி. (சி-47293) (54-15-12)
தலைவர், அறங்காவலர் சபை.

## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்
## மணல் விநியோக அறிவித்தல்

இன்று 10.01.2006 செவ்வாய்க்கிழமை மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. இதற்குப்பதிலாக செவ்வாய்க்கிழமை குறிப்பிட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்குரிய மணல் விநியோகம் 11.01.2006 புதன்கிழமை நடைபெறவுள்ளது. வியாழன், வெள்ளி ஆகிய தினங்கள் உலக வங்கி உட்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கு வழங்கப்படும். விவரம் வியாழன் பத்திரிகையில் தெரிவிக்கப்படும்.

மணல் விநியோகப்பகுதி, உபயகதிர்காமம். (சி-47287) -நிர்வாகம்-

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்
திருமதி சிறீசாந்தமலர் ஜீவராசா
அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்த தையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நாவற்குழி மகாவித்தியாலயம், கைதடி. (45202) (54-15-12)
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவு நாளில்....

மலர்வு 18 . 06 . 1976



உதிர்வு 26 . 12 . 2004

### திருமதி ஜெயசுதன் - சிவமதி (மதி)

(சட்டத்தரணி, நீதிமன்ற வளாகம் கிளிநொச்சி)

எங்கள் அன்புச் செல்வத்தின் முதலாம் ஆண்டு நினைவின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு எதிர்வரும் (13.01.2006) வெள்ளிக்கிழமை எமது தற்காலிக இல்லத்தில் நடைபெறவுள்ளது. எனவே இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் தங்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நி.முகவரி:-
வேம்படி, உடுத்துறை,
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி.
த.முகவரி:- தம்பகாமம், பளை. (45209) (54-15-12)
தகவல்:- குடும்பத்தினர்.

# பருத்தித்துறையில் கதவடைப்பு

கரவெட்டி,ஜன.10

பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட வெதுப்பக உரிமையாளருக்கு அஞ்சலி தெரிவித்து நேற்று பருத்தித்துறையில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் பருத்தித்துறையில் வெதுப்பக உரிமையாளரான சின்னராசா இராசையா இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தையொட்டியே நேற்றுபருத்தித்துறை வர்த்தக நிலையங்கள் அனைத்தும் கதவடைப்புச் செய்யப்பட்டன. (ஓ-70)


**UNIVERSITY OF LONDON**
**External Programme Unit**

VACANCIES

1. Clerk and Receptionist (Female)
   Requirements :- Fluent in English & Computer literacy.
2. Lab Assistant.
   Requirements:- Fluent in English & Good knowledge in computer programming

Interview : 14th Friday 2006 at 10 a.m.
213, Kasthuriyar Road, Jaffna. T.P: 077 6176476

**UNIVAC**
College of Computer Information Technology

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்
021-222 8250 , 0777 222422

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

80% off

வகுப்புக்கள்ஆரம்பம்:-
Batch I :- 13/01/2006 - 11.30-01.30
Batch II :- 15/01/2006- 11.30-12.30
Batch II :- 15/01/2006- 01.00-02.00

Diploma in Computerized Accounting
Accpac + Quick books pro +MYOB
வகுப்புக்கள்ஆரம்பம்:-
15/01/2006 Morning 08.30-09.30 Evening 04.00-05.00

**S. L. A. S வகுப்பு**

28.01.2006 இல் நடைபெற இருப்பதற்கான
★ பொது அறிவு
★ பொது உளச்சார்பு } த. தவசேகர்
★ சுருக்கம் - பா. மகாலிங்கசிவம்
11.01. புதன்
13.01 வெள்ளி } 9 மணி - 1 மணிவரை
15.01. சனி
22.01 சனி
23.01 ஞாயிறு } பிற்பகல் 1 - 5 மணி வரை
★ ஒவ்வொரு வகுப்புக்கும் கட்டணம் 100/- வகுப்புக்கள் D.M.I ஆரியகுளம் சந்திக்கு அருகில் நடைபெறும்.

**நாகம்ஸ் சுன்னாகம்**
சிலம்பரசன் நடித்த
**தொட்டி ஜெயா**
தினசரி: புதியநேரம் 10.30, 2.30, 5.30

**மனோகரா யாழ்ப்பாணம்**



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஆர்யா, த்ரிஷா, வடிவேல் நடித்த
**ஆறு**
தினசரி: பு.நே.10.30, 1.30, 4.30, 7.30,10.30
அதிரடி பொங்கல் வெளியீடு
(Dts நவீன ஒலிநயத்துடன்) **ஆதி**
இளைய தளபதி விஜய், திரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி: பு.நே.10.30, 1.30, 4.30, 7.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**
அர்ஜூன், நமிதா, வடிவேல்
**ஆணை**
காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15
எமது மகத்தான பொங்கல் வெளியீடு அல்டி மேட் அஜித் லைலா மற்றும் பலர் நடித்த [illegible]



**ராஜா யாழ்ப்பாணம்**
உங்கள் சத்தியராஜ் (இருவேடம்)
சங்கவி,ஆனந்தராஜ் நடித்த
**அய்யர் I.P.S**
காட்சிநேரம் [illegible] 10.30, 2.00 [illegible]
[illegible] நடித்த
சரவணா


# மரண அறிவித்தல்கள்

**திருமதி முத்துலிங்கம் சொர்ணமணி**



திருமதி முத்துலிங்கம் சொர்ணமணி அவர்கள் 02.01.2006 அன்று அமெரிக்கா புளோரிடாவில் அகால மரணமானார்.

அன்னார் K.முத்து லிங்கம் (பூநகரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பெரிய தம்பி, சிவகாமி ஆகியோரின் அன்பு மகளும் திருமதி மெலி யம்மா, செல்லத்துரை காலஞ்சென்ற திருமதி பரிமணம் கமலவேணி (இந்தியா), காலஞ்சென்ற முருகதாஸ், மோகனதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.01.2006) செவ்வாய்க்கிழமை 1.30 - 5 மணிக்கிடையில் கிரியைகள் நடை பெற்று, இறுதி நிகழ்வுகள் இடம் பெறும்.

**திருமதி லவன் றேச்சல்**



திருமதி றேச்சல் லவன் அவர்கள் 02.01.2006 அமெரிக்கா புளோரிடாவில் அகால மரணமானார்.

அன்னார் லவன் (குசன்-நயினாதீவு), அவர்களின் அன்பு மனைவியும் ஆகஸ்ரியன், லபீன்ந், பிரின்சஸ் (மீரா) ஆகியோரின் பாசமிகு தாயும் உமன் (குருவில்ல), சரம்மா (குருவில்ல) ஆகியோரின் மகளுமாவார். அவரின் பூதவுடல் இன்று (10.01.2006) செவ்வாய்க் கிழமை 1.30 - 5 மணிக்கிடையில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று இறுதி நிகழ்வுகள் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Contact Address: 1247 SW 149th lane, Sunrise, Fl, 33326, USA.
Funeral: Fred Hunter's Funeral Home 6301 Taft st Holly wood, Cl 33024, USA.

(சி-47295) (54-15-12)
தகவல்: வரன் முத்துலிங்கம் (001-954-452-8295)

## மாரிமுத்து திருச்செல்வம் (மானிப்பாய்)



(Retired Technical Officer (High ways)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் தெற்கு, லோட்டன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருச்செல்வம் அவர்கள் நேற்று (09.01.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பவளமல்லிகை (முன்னாள் ஆசிரியர், மானிப்பாய் மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக்கணவரும் சித்திரா, சகிலா (கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாணம்) றேணுகா (கனடா) ஆகியோரின் தந்தையும் பத்மநாதன் (இயக்குநர் பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம், இணுவில் Parathy சித்தன்கேணி), சிவாஜிலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரஜித் (கனடா), சஞ்சித் (கனடா), அபிராம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.01.2006) செவ்வாய்க்கிழமை 11.30 (ப.நே) நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோட்டன் வீதி, மானிப்பாய். (45212) (54-15-12)
தகவல்: மனைவி, மக்கள்.

## ஆறுமுகம் பார்வதிப்பிள்ளை



காரைநகர், திண்ணக்கனி சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 83, கோணவில் கிளிநொச்சியில் வசித்தவரும் தற்போது 69, சிவப்பிரகாசம் வீதி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் பார்வதிப்பிள்ளை நேற்று (09.01.2006) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் விஸ்வலிங்கத்தின் சம்மந்தியும் சிவக்கொழுந்தின் தாயாரும் சிவசுப்பிரமணியத்தின் மாமியாரும், குனேசபவான், (கனடா), திரவியபவான் (சுவிஸ்) பவளமலர், கோணேசலிங்கம் (லண்டன்), குணமலர் (லண்டன்), பிறைச்சந்திரன், தெய்வராணி, வாசுகி, தியாகலிங்கம், பவானி, சுந்தரேஸ்வரன், ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.01.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

69, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (45211) (54-15-12)
தகவல்: வி.சிவசுப்பிரமணியம் (மருமகன்)

## சின்னராசா இராசையா (சித்தப்பா)



(கிருஷிகேசன் வெதுப்பக உரிமையாளர்)

பருத்தித்துறை V.M.றோட், சின்னப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா இராசையா 08.01.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கமலாவதியின் கணவரும் கிருஷிகேசனின் (ஹாட்லிக் கல்லூரி மாணவன்) தந்தையும் மனோகரன், புலேந்திரன், தெங்காதரன், சிறீதரன், இராஜேந்திரன், புஸ்பவதி, றேவதி ஆகியோரின் மைத்துனரும் நிஷாந்தன், முகிலன், கபிலன், விதுரன், துரோணன் ஆகியோரின் சிறியதகப்பனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல்இன்று (10.01.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.M.றோட், சின்னப்பிள்ளையார் கோயிலடி, பருத்தித்துறை. T.P:- 0779073884 (45203) (54-15-12)
தகவல்: கமலாவதி (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சுக்குப் புலிகளைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கொழும்புப் பிரதிநிதிகளான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா, ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப் பிரதிநிதி ஜூலியன் வில்சன், அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லன்ஸ்ரெட் மற்றும் நெதர்லாந்துத் தூதுவர் வேன் டிஜேக் ஆகியோரை ஜனாதிபதி நேற்றுக்காலை அவசரமாக அழைத்துச் சந்தித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவி கடந்த ஆண்டு முடிவுவரை பிரிட்டன் வசம் இருந்தது. அதனால் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகளின் கூட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் பிரிட்டன் பங்குபற்றி வந்தது. தற்போது அந்தப் பதவி ஆஸ்திரியாவுக்குக் கிடைத்துள்ளது. ஆனால், இலங்கையில் ஆஸ்திரியத் தூதரகம் இல்லாத காரணத்தால் அந்தத் தூதரகப் பணிகளை நெதர்லாந்தே இங்கு கவனித்து வருகின்றது. அந்த வகையிலேயே நேற்று இணைத் தலைமைகளின் சந்திப்பில், ஐரோப்பிய ஒன்றித்தின் சார்பில் நெதர்லாந்து கலந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, திறைசேரிச் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோட்டபாய ராஜபக்ஷ, திட்டமிடல் அமைச்சுச் செயலர் அஜித் நிவாரட் கப்ரால், கூட்டுப் படைகளின் தளபதி தயா சந்தகிரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து இங்கு விரிவாக விளக்கிக் கூறியிருக்கும் ஜனாதிபதி, போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புலிகள் அப்பட்டமாக மீறுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டினார்.

அதேவேளை, அமைதி முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளுக்கு புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் குந்தகமாக அமைவதுடன், அரசு தொடர்ந்தும் பதில் நடவடிக்கைகளை எடுக்காமல் பொறுமையைக் கடைப்பிடித்தால் படையினரின் வெறுப்பைச் சந்திக்க வேண்டிவருமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான சூழ்நிலையில் அரசாங்கத்தின் அமைதி முயற்சிகளை வரவேற்பதுடன் நின்றுவிடாமல் பேச்சு மேசைக்கு புலிகள் வருவதற்கு கடும் அழுத்தத்தையும் இணைத் தலைமை நாடுகள் வழங்கவேண்டுமென்றும் நேற்றைய சந்திப்பில் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் தூதுவர்கள் பிரஸ்தாபித்தபோது, இது தொடர்பில் முழுமையான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக கூறியிருக்கும் ஜனாதிபதி, விசாரணை முடிவு பகிரங்கப் படுத்தப்படுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

### ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பு

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நேற்றுமாலை விடுத்த செய்திக்குறிப்பில் அடங்கியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களை காலையில் சந்தித்துப்பேசினார்.

விடுதலைப் புலிகளின் வன்முறைகள் குறித்து - குறிப்பாக கடந்த சனிக்கிழமை 13 கடற்படையினர் உயிரிழக்கவும் கடற்படை தளமொன்று அழிந்து போகவும் காரணமாக அமைந்த, ஆத்திரமூட்டப்படாமல் நடத்தப்பட்ட, புலிகளின் தற்கொலைத் தாக்குதல் குறித்து - அவர் விளக்கினார்.

விடுதலைப் புலிகளின் சகல பாணிகளையும் கொண்டதாக அமைந்த இந்தத் தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கையை ஜனாதிபதி மிக கடுமையான வார்த்தைகளால் கண்டித்தார்.

வழமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படை படகை மீனவர்களை கேடயமாக பயன்படுத்திவந்த வெடிகுண்டு நிரப்பட்ட படகு, கடற்புலிகளின் தற்கொலைத் தாக்குதல் பணியில் மோதியுள்ளது.

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மதிக்காத புலிகளின் உதாசீன செயற்பாடு குறித்து ஜனாதிபதி இங்கு கவலை தெரிவித்தார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தங்களின் கடப்பாடுகளைப் பேணுவதில் அரசு பற்றுறுதியாக இருக்கும் அதே சமயம் - பேச்சுகளை மீண்டும் தொடங்குவதற்கு புலிகளிடமிருந்து சாதகமான பதிலுக்கு அரசு காத்திருக்கும் வேளையிலும் - அரசின் பொறுமையை துஷ்பிரயோகப்படுத்தி தனது பயங்கரவாத நடவடிக்கைகளைப் புலிகள் அமைப்பு அதிகரித்து வருகிறது என ஜனாதிபதி இராஜதந்திரிகளுக்குச் சுட்டிக்காட்டினார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வாஷிங்டன் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கொண்டலீஸா ரைஸின் சந்திப்பையொட்டி அமெரிக்க அரச தரப்பிலிருந்து கிடைத்த பிரதிபலிப்புத் தொடர்பில் ஜனாதிபதி அங்கு திருப்தியை வெளியிட்டார்.

விடுதலைப்புலிகள் ஆத்திரமூட்டும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டு தாக்குதல்களைத் தொடுத்துவருகின்றபோதிலும் அரசு பொறுப்போடு பொறுமைகாட்டிவருவதை இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் இந்தச்சந்திப்பில் வெகுவாக வரவேற்றனர். அமைதி முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவும், இதுவிடயத்தில் இறுதிவரை தொடர்ச்சியாக அரசுடன் ஒத்துழைத்துச் செயற்படவும் இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் தமது விருப்பத்தை இந்தச்சந்திப்பில் தெரிவித்தனர்.

பொறுப்பான அரசு என்ற ரீதியில் தொடர்ந்தும் பொறுமை காத்துவந்தாலும், போர்நிறுத்த ஒப்பந்தம், அமைதி முயற்சி மற்றும் நாட்டின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் பயங்கரவாதத் தாக்குதல்களை எதிர்கொள்ளத்தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்குத் தமது அரசு தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

எவ்வாறிருந்தபோதும் படையினர் தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகப்படுத்துவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்கப்படாதென இங்கு உறுதியளித்த ஜனாதிபதி, திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்தான விசாரணைகள் நடைபெறுவதாகவும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் உறுதியளித்தார்.

போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறையாக அமுல்படுத்துவது தொடர்பான பேச்சுகளை இயன்றளவு விரைவில் ஆரம்பிக்க அரசு ஆர்வமாக இருப்பதை ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார். பேச்சுகளை நடத்துவதற்கான இடம்பற்றிப் பேசப்பட்டபோது ஜப்பானில் அதை நடத்துவதற்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பு, கடந்த மாதம் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் வரவேற்கப்பட்டமையும் கோடிட்டுக் காட்டப்பட்டது.

சிரேஷ்ட அரச அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். - என்று உள்ளது. (க)

## வவுனியாவில் இரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களும் இல்லாததாலும் அடையாளம் காணுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட வவுனியா தலைமைப் பொலீஸ் பொறுப்பதிகாரி எம்.சி.அபேசிங்க பண்டார, சடலங்களின் தலையிலும், மார்பிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருப்பதை உறுதிப்படுத்தினார்.

இதேவேளை கொல்லப்பட்ட இருவரும் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் கடமையாற்றும் புலனாய்வாளர்களான அஜித் மற்றும் சுரேஸ் என பிந்திய தகவல்கள் தெரிவித்தன. (க-164)

## ஆயுததாரிகளால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போவதாகக் கூறியபடி வீட்டினுள் நுழைந்தனர் என்றும் - பின்னர் அவர்கள் கமில்டன் மரியசீலனை - அவரது கர்ப்பிணி மனைவி தடுத்தபோதும் - விசாரித்துவிட்டு விடுவிப்பதாகக் கூறி அழைத் துச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

கடத்தப்பட்டவரின் மனைவி நேற்று அப்பகுதி இராணுவ முகாம், பொலீஸ்நிலையம் ஆகியவற்றுக்குச் சென்று கேட்டபோது, அவ்வாறு எவரையும் தாம் கைதுசெய்யவில்லை என்று படையினரும் பொலீஸாரும் தெரிவித்தனர். இது குறித்து இளவாலைப் பொலீஸ் நிலையத்திலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும் கடத்தப் பட்டவரின் மனைவி முறையிட்டுள்ளார்.(ஒ-86)


A/L
2007, 2008
கலைப்பிரிவு
புதிய பிரிவுகள்
ஜனவரி - 11 புதன்
மாலை 3 மணி
Ta - சுரேஸ்
H.L - கந்தசத்தியதாசன்
Log - கமல்
Eco - சண்
Go - கிருஸ்னா
Po.Si - திருமுருகன்
Dra - சத்தியா
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.


## அமைதிப் பேச்சு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாவல மேதானந்த தேரர், எம்.பிக்களான அனுர குமார திஸாநாயக்க, பெ.சந்திரசேகரன், விமல் வீரவன்ஸ, மகிந்த சமரசிங்க ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலைமை, தற்போதைய சமாதான முயற்சிகள் ஆகியன குறித்து இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டது. அமைதி முயற்சிகளின் போது சில விட்டுக்கொடுப்புக்களை செய்து அதனை உடனடியாக ஆரம்பிப்பதன் அவசியத்தை கட்சித் தலைவர்கள் இங்கு ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர்.

இதனை விரிவாக ஆராய்ந்து அனைத்துத் தரப்பினருடனும் பேசித் தீர்மானிப்பதற்காக எதிர்வரும் 19ஆம் திகதி பல தரப்பினர் பங்குபற்றும் மாநாட்டை கொழும்பில் நடத்துவதற்கு அங்கு தீர்மானிக்கப்பட்டது எனத் தெரியவந்தது.

இதேவேளை, இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் நேற்றுமாலை அறிக்கையொன்றை வெளியிட்டது. 'அரசியற் கட்சித் தலைவர்கள் விடும் கூட்டறிக்கை' எனும் தலைப்பிலான அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இறுதித் தீர்வொன்றுக்காக விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுகளை ஆரம்பிப்பது மற்றும் தெற்கிலுள்ள அனைத்து அரசியற்கட்சிகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது சம்பந்தமாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியற் கட்சிகளின் ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை இன்று (அதாவது நேற்று) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

நாட்டில் வாழும் அனைத்து பிரஜைகளினதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, அனைத்து தீவிரவாதச் செயற்பாடுகளையும் கண்டித்து, நாட்டில் கௌரவமான சமாதானமொன்றை ஏற்படுத்துவதற்காக அனைத்து அரசியற் கட்சிகளும் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டியதன் அவசியம், இந்தப் பேச்சில் கலந்துகொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது.

ஆரம்பகட்டமாக அமைதி முயற்சிகள் மட்டுமன்றி இறுதித் தீர்வுக்கான விடயங்கள் குறித்து எதிர்காலத்தில் விரிவாக பேச்சு நடத்தவும், அதற்காக அந்தந்த கட்சிகளிலிருந்து கூடுதல் பட்சம் ஐந்து பிரதிநிதிகளை தெரிந்தெடுக்கவும், நாட்டின் அனைத்து மத மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட மாநாட்டை எதிர்வரும் 19ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடத்தவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(க)

## தமிழ் ஊடகவிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உட்பட பல ஊடக அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன. (க)


CHEMISTRY CENTRE
Temple Road, (Green Park முன்னே)
A/L 2008
ஆரம்பம் :- 11.01.2006 4 p.m.
Wed, Thurs, Fri 4 p.m.
By:- அன்பழகன் B. Sc (44857)

C.C.A கல்வகம்
A/L 2008 கலை, வர்த்தகம்
ஆரம்பம் - 11.01.2006
(புதன்) 8 a.m.
By. V. முரளி
வணிகக்கல்வி 2007
பகுதி II
ஆரம்பம் :- 15.01.2006
(சனி) 5 p.m.
(45208)

தேவை
படப்பிடிப்பாளர் ஒருவருக்கு
நல்ல நிலையில் உள்ள
VIDEO, DIGITAL, STILL,
PROPOTIONAL, CAMERA உடன்
தேவை.
தொடர்பு:- 0777 283824.
(சி- 47300)


## காவலரண் மீது தாக்குதல்!

மட்டக்களப்பு, ஜன. 10

மட்டக்களப்பு வவுணதீவில் விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவலரண் மீது நேற்றிரவு 8.45 மணியளவில் ஆயுதக் குழுவொன்று ஊடுருவி நடத்திய தாக்குதல், புலிகளின் பதில் தாக்குதலால் முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## நித்திரைப் பருக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட கிரிமினல் மூலங்களை இலக்குவைத்து 'சுற்றாடலைத் துப்புரவு செய்யும்' வழமையான சட்ட அமுலாக்க நடவடிக்கையே அது என்று விளக்கமளிக்கப்பட்டது.

இதுபோன்ற நடவடிக்கைகள் இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளிலும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டோரில் 90 வீதமானோர், முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டமைக்கு அமைய அன்றைய தினமே விடுவிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- இப்படி ஜனாதிபதி செயலகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 'ஸ்ரேஞ்ஞர்ஸ் நைற்' என்ற பெயரில் தலைநகரில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல்களில் தமிழர்கள் மட்டுமே - ஆயிரத்துக்கும் அதிகமானோர் - வீடுகளிலிருந்து பொலீஸ் நிலையங்களுக்குத் தள்ளிச் செல்லப்பட்டனர்.

ஆக, தலைநகரில் போதைவஸ்துப் பாவனையாளர்களிலும் கும்பல்களிலும் தமிழர்கள் மட்டுமே அடங்குகின்றார்களா என்று தமிழர் தரப்பில் விசனத்துடன் கேள்வி எழுப்பப்படுகின்றது. (க)

## துப்பாக்கிச் சூட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அங்கு வந்த இனம்தெரியாத இருவர் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.(ஒ-7-12-13-14-15-31-117)

## திருநெல்வேலியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திலேயே மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சடலம் யாழ். வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

என்ன காரணத்திற்காக இவ்இளைஞர் கொலை செய்யப்பட்டார் எனத் தெரியவில்லை என்றும் -

தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள் என்றும் - யாழ். பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனையின்பின் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு யாழ். பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (ஒ-7-12-14-15-86-139)

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை சபாரெத்தினம்

ஊர்காவற்றுறை புளியங்கூடலை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சபாரெத்தினம் அவர்கள் 8-1-2006 அன்று ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மயில்வாகனம், வள்ளியம்மையின் அன்பு மருமகனும், தவமணி (கனடா), சோதி, சிவநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்ற திருச்செல்வம் (பிரபல வர்த்தகர்- காலி) - தியாகராஜா ( சுவிஸ்), பத்மாவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாகம்மா, கமலம் சதாசிவம் மற்றும் முருகேசு, சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற குருசாமி ஜே.பி., காலஞ்சென்ற சோமசுந்தரம், சிவபாக்கியம், சீவரெத்தினம், அன்னலட்சுமி, கனகரெத்தினம், அன்னம்மா, முத்தம்மா, பொன்னுத்துரை மனோன்மணி, தங்கம்மா ஆகியோரின் மைத்துனரும், சண்முகமணி, முரளிதரன், சுரேந்திரன், ரேணுகா, சசிகுமார், சத்தியன், ரேகா ரதினி, ராகினி, ரஜனி, குமரன், பிரமிளா, கிருசா, உசாந்தினி, நிரோஜிதன் ஆகியோரின் அன்பு பேரனும், தீபிகா, கிரிதரன், மாதங்கி, அஸ்வின், வினுஸ்கா, அஸ்விகா, அபிசன், ஜனுஷாந்த், காருஷன், விபுர்சிகன், அபினாஷ் ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்றும் நாளையும் (செவ்வாய், புதன் கிழமைகளில்) கொழும்பு, பொரளை, ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் நாளை 11ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

7 1/1 கொலிங்வூட் பிளேஸ்,
கொழும்பு - 06.
4520923

தகவல்:-
பிள்ளைகள், மருமக்கள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org